"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2021



ISSN 2055-6616

"மன்றுள் ஆடும் மதிசூடும் பெருமான்
இன்று எழுந்தருளுகிறான் இலண்டன் வீதியிலே"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன்
25வது
வருடத்தில்

# RUBY'S
CATERING

020 8799 7180

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|



திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா



**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton
THISTLE HOTELS
more than just accommodating
Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**
mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

மணி 29

# கலசம்
# KALASAM

ஒலி 99

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

# தமிழ் வாழும்!

“தமிழில் அருச்சனை செய்யவேண்டும்”, “பிராமணர்கள் தமிழை ஒழிக்கப் பார்க்கிறார்கள்” என்கின்ற கோஷங்கள் அவ்வப்போது எழுந்தவண்ணம் இருக்கின்றன. தமிழ்த் திருமுறைகளைப் படிக்காதவர்களும் தமிழுக்குப் பிராமணர்கள் செய்த சேவைகளை அறியாதவர்களுமே இப்படிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்த்தாத்தா என்ற உ வே சாமிநாதையர், யாழ்ப்பாணத்து வித்துவான் கணேசையர் போன்ற பலர் செய்த சேவைகள் அளப்பரியன. தமிழிலே அருச்சனை செய்வதாலும், சிவாசாரியர்களைக் கோயில்களை விட்டு வெளியேற்றுவதாலும் மட்டும் தமிழ் வாழ்ந்துவிடாது, மாறாக, தமது வீட்டுக்குள்ளேயே தமிழைப் புறக்கணிக்கும் தமிழர்கள் உலகம் முழுவதும் பரவியிருக்கும்வரை இது நடக்காது.

தமிழர்கள் தற்போது உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்றார்கள். ஈழம், தமிழகம் போன்ற இடங்களிலிருந்து வந்த முதற் தலைமுறையினர் தமிழ் பேசுகிறார்கள். பிள்ளைகளுக்கும் சிலர் தமிழ் கற்பிக்கிறார்கள். ஆனால் அவர்களிலே பலர் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயரே வைப்பதில்லை. மாறாக, ஏதேதோ பெயர்களே வைக்கிறார்கள். குடும்பச் செய்திகள் ஊடகங்களில் வரும்போது சொல்லப்படும் பெயர்களின் பொருளென்ன என்றே கண்டுபிடிக்க இயலாதவாறு உள்ளது. எண்சோதிடம், எல்லாப் பிள்ளைகளுக்கும் எதுகை மோனையோடுதான் பெயர் வைக்கவேண்டும் என்ற எண்ணங்கள் தலைதூக்கி நிற்கின்றன. தமிழ் நாட்டிலும் ஈழத்திலும்கூட இப்போது பலர் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர் வைப்பதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் பெயர் ஓர் இனத்தின் அடையாளமாக இருந்தது. “சேந்தன்” என்று ஒருவரும் “சேவாக்” என்று ஒருவரும் வந்தால் அதில் யார் தமிழர், யார் அல்லாதவர் என்பது தெரிந்துவிடும். இப்போதைய நிலை அதுவன்று. இப்போதைய பெயர்களில் தமிழில்லை.

இது ஒருபுறம் இருக்க, வீட்டிலே பிள்ளைகளைத் தமிழிலே பேசச் சில பெற்றோர் ஊக்குவிப்பதில்லை. பேச முயன்றாலும், “உச்சரிப்புப் பிழை” என்று கிண்டலடித்துப் பேசவிடாமலே பண்ணிவிடுகிறார்கள். இதனால் பிள்ளைகள் தமிழ் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். தமிழைப் பேண வேண்டுமானால் முதலில் நாம் நம்முடைய பிள்ளைகளுக்குத் தமிழிலே பெயர்வைக்கவேண்டும். அவர்களின் உச்சரிப்பைத் திருத்தி உற்சாகப் படுத்திப் பேசவைக்கவேண்டும். தமிழ்த் திருமுறைகள் புராணங்களைச் சொல்லிக்கொடுத்துப் படிக்க வைக்கவேண்டும். இவை மூன்றையும் முதலிலே செய்வோம். செய்தால் தமிழும் வாழும்.

**க ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# இந்த இதழில்


| | |
|---|---|
| பூரணமான சமர்ப்பணம் - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| திருவையாறு - பயணக்கட்டுரை | 07 |
| திருவாசக்தில் இசைமரபு | 11 |
| பாம்பன் சுவாமிகள் | 14 |
| "அழுதால் அவனைப் பெறலாமே" | 18 |
| திருமுறையின் பெருமை அறியும் பேறுபெற்றேன் | 29 |
| திருக்குறள் கதைகள் | 31 |
| அறம் சார்ந்த கல்வி | 33 |
| கோண்டாவில் கந்தையா சுவாமிகள் (குடைச்சுவாமி) | 35 |
| வாரியார் படைத்த விருந்து | 39 |
| The Power of Mantras | 41 |
| சக்தி வழிபாடும் ஆடிப்பூரமும் | 45 |
| திருமந்திரத்தின் சிறப்பு | 47 |


**அட்டைப்படம் வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# பூரணமான அர்ப்பணம்

## கந்தபுராணச் சிந்தனைகள்

**Dr க சிவலோகநாதன்**

சிவனடியார்களின் பெருமையைச் சொல்லப் புகுந்த சேக்கிழார்,

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்"

என்று விளம்பினார். சைவநெறிக்கு அவர்கள் தம்மை அர்ப்பணித்தவர்கள்; எந்த நிலையிலும் அதைக் கைவிடாதவர்கள் என்று சேக்கிழார் பெருமான் அறுபத்துமூன்று நாயன்மார்களைப்பற்றிச் சொன்னார். ஆனால் இது இறைவனுக்குரிய அர்ப்பணம். உலகாயதத்திற்கு,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

ஒருவனை ஆராயாமல் நல்லவன் என்று தெளிவடைதலும், ஆராய்ந்து நல்லவன் என்று தெளிந்த ஒருவனிடம் ஐயுறவு கொள்ளுதலும் தீராத துன்பத்தைத் தரும் என்று வள்ளுவப் பெருந்தகை சொல்கின்றார். இந்த வகையிலே பார்த்தோமேயானால், பூரணமான அர்ப்பணமே கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் என்பது புலனாகும். சில சம்பவங்களை நோக்குவோம்.

தாயாகிய மாயையின் அறிவுறுத்தலின் பேரில், அசுர குலத்தின் ஒளிமயமான எதிர்காலத்தை வேண்டி, மாயையின் மைந்தர்களாகிய சூரனும் சிங்கமுகாசுரனும். தாரகாசுரனும் சூரனுடைய தலைமையில் பெருவேள்வி செய்கின்றார்கள். பலகாலம் சிவபெருமான் வெளிப்படவில்லை. கடைசியாகச் சூரன் தன்னுடைய உடலை அரிந்து ஓமத்தீயிலிட்டான். சிவபெருமான் வெளிப்படவில்லை. இறுதியாக ஓமகுண்டத்தைச் சிங்கமுகாசுரனிடம் கொடுத்துவிட்டு ஓமகுண்டத்தில் விழுந்து உயிரை விடுகிறான் சூரன். இதைக் கண்ட சிங்கமுகாசுரன் கலங்கிப்போனான். "தாயும் நீரே, தந்தையும் நீரே, அசுரர் எல்லோரையும் ஆணை செய்யும் தலைவனும் நீரே, எங்கள் உயிரும் நீரே என்று நாங்கள் நம்பியிருந்தோம். எம்மை விட்டுப் போய்விட்டீரே" என்று புலம்பினான். ஆனால், கொண்ட கொள்கையில் மாற்றம் கொள்ளவில்லை. கொள்கைக்கு பூரணமான அர்ப்பணம் கொண்ட சிங்கமுகாசுரன், சூரன் இறந்ததைக் கண்டு இந்திரன் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த நேரத்திலே, என்னுயிர் போன்ற தமையன் மடிய நான் இந்த உலகத்தில் இருப்பது நல்லதா என்று எண்ணி எழுந்தனன். வன்மையுடைய அத்தகைய சிங்கமுகாசுரன் ஆயிரம் தலைகளில் பலவற்றையும் தனது கைகளால் அறுத்து முன்பு சூரபன்மன் முயன்று செய்த வேள்வித்தீயில் வீரம் பேசி இட்டான்.

அன்ன திறல் அவுணன் ஆயிரமென்றுள்ள அகன்
சென்னிபலவும் தனது செங்கை வாளால் ஈர்ந்து
முன்னம் முதல்வன் முயன்ற பெருவேள்வி
வன்னி அதனுள் மறம் பேசி இட்டனனே

-அசுரர் யாகப் படலம் *111*

இதற்கும் சிவபெருமான் வெளிப்படவில்லை. இறுதியாகச் சிங்கமுகாசுரன் ஓம குண்டத்தில் குதித்து உயிரைவிட எத்தனித்தான். சிவபெருமான் தோன்றி அசுரகுலம் பெருவாழ்வு வாழப் பெருவரங்கள் தந்தார். அசுர குலத்திற்கான பூரணமான அர்ப்பணம் சூரன் உயிரை விடும் அளவுக்கு அவனுக்கு வைராக்கியத்தை அளித்தது. தமையனுக்கான பூரணமான அர்ப்பணம் சிங்கமுகாசுரனை உயிர்விடத் துணியச் செய்தது.

தேவகம்மியனுடைய மகள் சவுரி தாரகனின் பட்டத்து மகிஷியாக இருக்கிறாள். அவளுக்கு அசுரேந்திரன் என்ற நல்ல மகன் ஒருவன் பிறந்து பெரியவனாக இருக்கிறான். அந்த நேரத்திலே தாரகன் முருகப்பெருமானுடைய கைவேலால் இறக்கின்றான். தாரகனோடு இருந்து பெருவாழ்வு வாழ்ந்து மகிழ்ந்தவள், தகப்பனாகிய தேவகம்மியனுடன் சென்று வாழ விரும்பவில்லை. மைந்தன் அசுரேந்திரன் தகப்பனுக்குரிய இறுதிக் கடன்களையெல்லாம் செய்து தகப்பனாரின் உடலையும் தகனம் செய்கின்றபோது, தாயான சவுரி அவனிடம் சென்று, “என் கணவனுடன் தீயில் புக விரும்புகிறேன். அதற்குத் தீயை வளர்ப்பாயாக” என ஏவுகிறாள்.

ஈமக் கடன்கள் இயற்றித் தன் றாதை தனைத்
தாமக் கனலால் தகனம் புரிந்திடலுங்
காமுற் றனனென் கணவனுடன் செல்வதற்குத்
தீமுற் றருதியென அன்னை சென்றுரைத்தாள்.

-அசுரேந்திரன் மகேந்திரஞ் செல் படலம் 17

அவன் நடுநடுங்கித் தாயைப் பலவாறும் தடுத்துத் தன்னுடனிருத்த முயல்கிறான். அவள் கடிந்துரைக்க, தாயின் விருப்பப்படியே செய்தான். கணவனுக்குத் தன்னைப் பூரணமாக அர்ப்ணித்த மனைவியை இங்கே காண்கிறோம்.

முருகப்பெருமானுடைய படைகளுக்கும் சூரனின் படைகளுக்குமிடையே யுத்தம் தொடங்குகிறது. முதல் நாள் யுத்தத்தில் பானுகோபனின் தலைமையிற் சென்ற படை, வீரவாகுத்தேவரின் தலைமையில் வந்த முருகப்பெருமானின் படைகளுடன் மோதுகிறது. பானுகோபன் தோற்று மாயமாய் மறைந்து வீடு திரும்புகிறான். இரண்டாம் நாள் சூரபன்மன் முருகப்பெருமானுக்குத் தோற்று மாயமாய் மறைந்து வீடு திரும்புகிறான். மூன்றாம் நாள் பானுகோபன் யுத்தத்திற்குப்போய் மாயா பாசத்தை ஏவி வீரவாகுத்தேவரையும் பூதப்படைகளையும் கட்டிக் கடலில் இடுகிறான். முருகப்பெருமானின் வேல் அவர்களை விடுவிக்கிறது. தொடர்ந்த போரில் மூன்றாம் நாள் இரவு, நான்காம் நாள் பகல் இரவு முழுவதும் நடந்த போரில் அசுரர் பக்கம் முழுக்க இறந்து விடுகிறது. பானுகோபன், சூரன், சிங்கமுகாசுரன் மூவருமே மிஞ்சி இருக்கின்றனர். அந்த நிலையிலே பானுகோபன் தந்தையிடம் அசுரபக்கம் அடைந்த கஷ்டமான நிலையை விளக்குகிறான். “தந்தையே! நீங்கள் ஆற்றல் வாய்ந்த மைந்தரை இழந்து விட்டீர்கள். நால்வகைப் படைகளை உடையான் என்ற உயர்வையும் இழந்து விட்டீர்கள். நீங்களும் நானுமே எஞ்சி இருக்கின்றோம். மேன்மையாக விளங்கி எமது குலத்தை வேருடன் அழிக்க எமன் வந்திருப்பதை நீங்கள் அறியவில்லை. கொடிய போரைச் செய்ய வல்லவர் கிடைத்தால் நான் மனம் மகிழ்வேன். பகைவர் போருக்கு நான் அஞ்சவில்லை. மன்னவர் நீங்கள் இன்னும் பலகாலம் வாழ வேண்டும் என்னும் ஆசையால் இவற்றைச் சொன்னேன்.”

வெஞ்சமர் செய வல்லவர் கிடைத்திடின் மிகவும்
நெஞ்சகந் தளிர்ப் பெய்துவன் நேரலர் சமருக்
கஞ்சினேன் என்று கருதலை அரச நீ இன்னும்

உஞ்சு வைகுதி யோவெனும் ஆசையில் உரைத்தேன்
-பானுகோபன் வதைப் படலம் 20

இவ்வாறு பானுகோபன் சொல்லியும் சூரபன்மன் கேட்கவில்லை. பானுகோபன் போருக்குப் புறப்பட்டுத் தேரிலே ஏறி, "......சூரனிடைக் கொண்ட அன்பும் உளத்தை உண்ணப் போருடைத் திசையை நோக்கிப் பொள்ளெனப் போதல் உற்றான்". சென்ற பானுகோபன் மிகவும் கடுமையாகப் போரிட்டு வீரவாகுதேவரின் வாளினால் மாண்டு போகிறான். இது ஒரு பூரணமான அர்ப்பணமே.

சிங்கமுகாசுரனைப் போருக்கு அனுப்புகிறான் சூரன். "ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைப் பாலன் என்று எண்ணினாய். விளைவை நீ அறிந்து கொள்ளவில்லை. நான் முன்பு சொன்ன நல்வார்த்தைகள் உனக்கு நஞ்சாக இருந்ததே. விதியை எவரே வெல்லும் தன்மையுடையவர். அணை கடந்து ஓடுகின்ற நீரை மறித்துப் பயனில்லை. நான் போருக்குச் சென்று பகைவராக வந்தவர்கள் எல்லோரையும் கொன்று விழுங்கிவிடுவேன். கந்தனை வென்றால் உன்னை மீள வந்து காண்பேன். அல்லாவிடில் யாவரும் இறப்பது உறுதி", என்று கூறிவிட்டுச் சென்ற சிங்கமுகாசுரன் முருகப்பெருமானுடன் யுத்தம் செய்து இறக்கிறான். சிங்கமுகாசுரனின் பூரணமான அர்ப்பணம் வெளிப்பட்டது. இவ்வாறு பல இடங்களிலும் தலைவன் என்று தெளிந்தவனுக்குப் பரிபூரண அர்ப்பணம் கந்தபுராணம் காட்டும் சைவக் கலாசாரமாக வெளிப்படுவதைக் காணலாம்.

# 'கலசம்' நூறாவது இதழ்!

அன்பான கலசம் வாசகர்களுக்கு!

வணக்கம். கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளாகக் 'கலசம்' என்ற இந்த ஆன்மிகக் காலாண்டிதழ் இலண்டனிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. சைவ முன்னேற்றச் சங்கம் (ஐஇ) இதை வெளியிட்டு வருகின்றது. கலசத்தின் நூறாவது இதழ் 2021ஆம் ஆண்டு ஜனவரியில் வந்திருக்கவேண்டும். ஆனால், 'கொரோனா' பெருந்தொற்றின் காரணமாக 2020இல் மூன்று இதழ்கள் வெளிவரவில்லை. பின், இவ்வருடம் (2021) தைப்பொங்கலுடன் கலசம் குழுவினரின் முயற்சியில் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. அந்த இதழ் இலங்கையிலும் அதே தினத்தில், தைப்பொங்கல் அன்று (14.01.2021) வெளியிடப்பட்டது. தொடர்ந்தும் இனிவரும் இதழ்களை இலங்கையிலும் வெளிடவுள்ளோம்.

'கலசம்' நூறாவது இதழை இந்த ஆண்டுக்கான ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இதழாக வெளியிடத் திருவருள் கைகூடியிருக்கிறது. அக்டோபர் 2021இல் இது வெளியாகும். எனவே வாசகராகிய உங்களிடமிருந்து கட்டுரைகள் கவிதைகளை எதிர்பார்க்கிறோம். ஆக்கங்கள் ஆங்கிலத்திலும் இருக்கலாம். எல்லா வயதினரும் அனுப்பலாம். இளைய தலைமுறைக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிடைக்கவேண்டிய கடைசித்திகதி 20.08.2021. இதற்குப் பின் வருபவை அடுத்து வரும் இதழ்களில் பிரசுரமாகும். நூறாவது இதழில் பிரசுரமாகும் தரமான ஆக்கங்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆக்கங்கள்:

1. சைவசமயம், பத்தி இலக்கியம், ஆராய்ச்சி சம்பந்தமாக இருக்கவேண்டும். (திருமுறைகள், புராணங்கள் போன்றவை)
2. கையெழுத்துப் பிரதி A 4 தாளில் 6 பக்கம், தட்டச்சில் 4 பக்கத்துக்கு மேற்படக்கூடாது.
3. Bamini/ Akarathi font, size 12, word format இல் இருக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய விலாசம்:
மின்னஞ்சல்: smsukkalasam@gmail.com
அஞ்சல்: 2 Salisbury Road, Manor Park, London E12 6AB, UK
இலங்கைத்தொடர்பு: V. Sivanarudchelvan, "Siva Akam", Mirusuvil South, Mirusuvil
email: svarul@yahoo.co.uk

பணிவன்புடன்,
'கலசம்' நிருவாகக் குழுவினர்

# அறிவோம் ஆன்மிகம்

**மரணம் நிகழ்ந்த வீடுகளில் திருமணம் போன்ற நல்ல காரியங்களை, இரத்த சம்பந்தமான உறவுகன் எவ்வளவு காலம் கழித்து நடத்தலாம், கோயில்களுக்கு எப்போது செல்லலாம்?**

குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் சுபகாரியங்களைத் தவிர்த்தல் நலம். ஒவ்வொரு உறவு முறைகளுக்கு ஏற்பவும் அவரவர் சம்பிரதாயங்களின்படியும் தங்களின் வீட்டு வாத்தியாயர் மூலமாகவும், பெரியவர்கள் மூலமும் விவரம் தெரிந்து கொள்ளவும். ஆலயம் செல்வதைக்கூடச் சிலர் பதினாறாம் நாள் முதலும், சிலர் மூன்று மாதங்கள் கழித்தும், சிலர் ஒரு வருடம் கழித்தும் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார்கள். இதையும் அவரவர் குலத்திற்கேற்ப அறிந்து கடைப்பிடிக்கவும்.

**விளக்கைத் தானாக அணையவிடக் கூடாது என்று ஒரு துணுக்குச் செய்தி பார்த்தேன். ஆனால், விளக்குகளை நாமாக அணைத்து மீதமுள்ள எண்ணையில் மறுநாள் விளக்கு ஏற்றக் கூடாது என்று பெரியவர் ஒருவர் கூறக் கேட்டு இப்போதெல்லாம் தானாக அணைய விடுகிறேன். இதைத் தொடரவா: இல்லை மாற்றிக் கொள்ளவா?**

இரவு நாம் உறங்கு முன்னர், விளக்கை மரியாதையுடன் அணைத்து விடுவதே சிறந்தது. அந்த நாள் ஊற்றிய எண்ணை மறுநாள் சிறிது இருப்பதில் தவறில்லை. பொதுவாக அந்த நாள்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் தவிர்த்து அனைத்து நாள்களிலும் விளக்கைப் பளபளவெனத் தேய்த்தே பயன்படுத்தி வந்தார்கள்.

விளக்கு எவ்வளவுக்குத் தூய்மையாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அந்த வீட்டில் நல்லவை பெருகும் என்று நம்பினார்கள். எனினும் தற்காலத்தில் ஒரு சில வீடுகளைத் தவிர பலர் வாரம் ஒரு முறை கூடத் தேய்ப்பதில்லை. இது தவறு. நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள எப்படி நேரம் செலவிடுகிறோமோ, அது போன்று குறைந்த பட்சம் வாரம் ஒரு முறையாவது விளக்கைத் தேய்த்து, தூய மனதைப் பெறுவதற்குத் தூய்மையான விளக்கைப் பயன்படுத்துதல் வேண்டும்.

நன்றி: “அறிவோம் ஆன்மிகம்” எனும் நூலிலிருந்து

## தெரியவில்லை; புரியவில்லை

தமிழ்த் திருமுறைகள், வடமொழித் தோத்திரங்கள் என்பவை அவற்றை ஓதும் மரபுவழியின்றும் விலகி, மெல்லிசையாகி வந்துவிட்டன. மேற்கு நாட்டு இசை வடிவங்கள்கூட வந்துவிட்டன. மக்களை அடையவேண்டும் என்போரும் விற்பனையாற் பொருளீட்ட விரும்புவோரும் இதைச் செய்கிறார்கள். இது ஏன் என்பது **தெரியவில்லை.**

கருவிகளைத் தயாரிப்போர் அவற்றை இயக்குவதற்கு அதற்கான வழிமுறைகளை ஆக்கிக் கொடுக்கிறார்கள். அதை மாற்றினால் அவை இயங்கா. அதுபோல சில வழிபாட்டு முறைகளை மரபுவழியின்று மாற்றினால் பலன் உண்டா என்பதும் ஏன் மாற்றவேண்டும் என்பதும் **புரியவில்லை.**

# திருவையாறு

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

திரு + ஐந்து + ஆறு = திருவையாறு. திரு = தெய்வீகம், மேன்மை, இலக்குமி, புனித, மங்கள, மரியாதைக்குரிய.

ஐந்து ஆறு = காவிரி, குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு எனும் ஐந்து ஆறுகள் சம்பந்தப்பட்டதால் திருவையாறு.

பூலோக கைலாயம் எனப்படும் இத்தலம் சப்தவிடத்தலத்தில் ஒன்றாகும். “திருவையாறு மண்ணை மிதித்தால் முத்தி” எனவும் கருதப்படுகிறது.

இறைவன் : ஐயாற்றீசர், பஞ்சததேஸ்வரர், செம்பொற்சோதீஸ்வரர்.

இறைவி : தர்மசம்வர்த்தினி, அறம்வளர்த்த நாயகி.

தலமரம் : வில்வம்

தீர்த்தம் : சூரிய தீர்த்தம் - காவிரி

தலத்தின் சிறப்புக்கள்:

1. நால்வரால் பாடப்பெற்றது.
2. பிருதுவி தலமாகக் கொள்ளப்படுகிறது.
3. நவக்கிரகங்களில், சூரியத்தலமாக விளங்குகிறது.
4. அப்பர் பெருமான் கயிலைக் காட்சியை கண்டு மகிழ்ந்த இடம். (இக்காட்சி ஆண்டுதோறும் ஆடி அமாவாசை அன்று நடைபெறுகிறது)
5. சுந்தரரும், சேரமானும் வரும்போது இறைவன் காவிரி வெள்ளத்தை ஒதுங்கி வழிவிடச் செய்து காட்சி கொடுத்தது.
6. சக்தி பீடத்தில் இது தர்ம சக்திபீடம்.
7. தியான மண்டபம் சீமெந்தாலும், கருப்பட்டியாலும் (Jaggery) நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
8. மூன்றாம் பிரகாரத்தில் தென்மேற்குத் திசையில் குறிப்பிட்ட இடத்தில் நின்று “ஐயாறு” என்று சப்தித்தால் ஐந்துமுறை எதிரொலிக்கும்.




**பயணம்:**

*2019 ஆம் ஆண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணியளவில் காரில் வழமைபோல்* சென்றோம். *15* ஏக்கர் நிலத்தில், நான்கு கோபுரங்களோடு, ஐந்து பிரகாரங்கள் கொண்ட ஐயாறப்பர் இம்முறை தன்னை நன்றாகப் பூசித்து வணங்கிச் செல்லுமாறு விரும்பினார் போலும்! இராஜகோபுரம் கிழக்கு நோக்கி 7 நிலைகள் கொண்டது. வணங்கி, படியை இறைவனது பாதம் எனத் தொட்டு உட்சென்றால் அங்கு எமக்காக காத்திருந்தது போல் பிரமாதமான பூசை ஆரம்பித்தது. மண்ணால் ஆகிய சுயம்புலிங்கம், கிழக்கு நோக்கியது. பசுவின் உருவமும் அதன் மேல் சூலம் பொறிக்கப்பட்ட கவசம் உளது. இதனால் இறைவனுக்கு “திரிசூலி” என்ற பெயருண்டு. “வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்!” என்ற திருமுறைத் தொடருமுண்டு.

மண்ணால் ஆகிய மூர்த்தி என்றதால் ஆவுடையாருக்கே அபிடேகம் நடைபெற்றது. புனுகு சட்டம், அதுவும் கைபடாமல் அரனுக்குச் சாத்தப்படுகிறது. மிக ஆறுதலாக, பக்தி பூர்வமாக நடைபெறும் பூசையை நாங்கள் ஒன்றி மனப்பூர்வமாக அநுபவித்தோம்.

ஐயாறப்பரின் ஜடாமுடி கருவறையின் பின்பக்கம் பரந்து விரிந்து கிடப்பதாக ஐதிகம். இதனால் சந்நிதியைச் சுற்றி வரத் தடை உளது. சிவனுக்கு சடையன் என்ற பெயர் உண்டு. "பனித்த சடை" என்ற வார்த்தையில் "சடை" பெரிய புராணத்தில் 290 முறை இருக்கிறது என்பதை ஈண்டு கவனிக்கத்தக்கது. தட்சணாமூர்த்தி பிரகாரத்தில் காலில் முயலுக்குப் பதிலாக ஆமையோடு காட்சியளிக்கிறார். 18 தட்சணாமூர்த்திகளில் இது ஒருவகையாகும்.

அபிடேகம், அலங்காரம், தீப, தூபம் யாவும் முடிந்த பின்னர் உற்சவ மூர்த்தியை தூக்கிக்கொண்டு வீதிவலம் வந்தனர். மனைவியாரும் யானும் இணைந்தோம். தனிக்கோபுரம் கொண்ட அம்பாளிடம் சென்றோம். சிற்ப அழகு கொண்ட கருவறையில் நான்கு கரங்கள் கொண்ட அம்பாள் நின்ற நிலையில் அருள் பாலிக்கிறாள். கிழக்கு நோக்கிய பிரகாரம், கொடி மரம், பலிபீடம் கொண்டு தனிக்கோயிலாக அம்பாள் கோயில் இருக்கிறது. அம்பாளின் மேல் கரங்களில் சங்கு, சக்கரமும், கீழுள்ள வலது கரம் அபயகரமாகவும் இடதுகரத்தை இடுப்பில் வைத்துக் கொண்டும் விஷ்ணுரூபமாகக் காட்சியளிப்பது புதுமை. "அரி அல்லால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே" என அப்பர் இங்கு பாடினார். அம்பாள் விஷ்ணு ரூபமாக இருப்பதால் திருவையாறு ஆலயத்தில் மாத்திரமன்றி, திருவையாறில் இருக்கும் இதர ஆலயங்களிலும் விஷ்ணு இல்லை. திருமால் கோயிலில் நடக்கும் "மகாலட்சுமி புறப்பாடு" ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்பாளுடன் நடைபெறுகிறது. இறைவனிடம் நெல்லுப்பெற்று அறக்கட்டளை செய்தபடியால் "அறம் வளர்த்த நாயகி" என்று (வடமொழியில் தர்மசம்வர்த்தனி) அம்பாள் குறிப்பிடப்படுகிறாள்.

**வில்லேந்திய வேலர் (தனு சுப்பிரமணியர்)**

உற்சவ மூர்த்தியோடு சென்று முருகனைத் தரிசித்தோம். சென்றவுடன் பகல் 12 மணியிருக்கும். காத்திருந்தது போல் அபிடேகமும், பூசையும் நன்றாகவே நடந்தன. வேலவன், அழகிய ஒரு முகத்தோடு, நான்கு கரங்களோடு, இடப்பக்கத்தில் வில்லு ஏந்தி வேடர் கோலத்தில் அருள்பாலிக்கிறார். வள்ளி, தெய்வானை சகிதம், பின்னால் தெற்கு முகம் காட்டி மயில் நிற்பது புதுமையான கண்கொள்ளாக் காட்சியாகும்.



**ஆட்கொண்டார்**

தெற்கு வாசலில் சிறு கோபுரத்தோடு எமனைக் காலின் கீழ் வைத்து இருக்கும் நிலையில் தரிசித்தோம். இவருக்கு வடைமாலை சாத்தும் வழக்கம் உளது. எமபயம் நீங்க மக்கள் வணங்குவர். இவரை அணுகி நன்றாகவே பார்த்து வணங்கலாம். ஆட்கொண்டாரின் இடது பக்கத்தில் ஆதி சங்கரரால் அமைக்கப்பெற்ற குங்கி லியம் போட்டு எரிக்கும் குதகம் இருக்கிறது. அருகில் உள்ள கடையில் வரிசைக்கிரமத்தில் நின்றுதான் குங்கிலியம் பெறலாம். குங்கிலியம் எம பயம் குறைப்பதாகவும், கிருமிநாசினியாகவும், மனத் திருப்தியைக் கொடுப்பதாகவும் கருதப் படுகிறது.

**நந்தி**

சிலாத மகரிஷிக்குக் கிடைத்த புதல்வன் நந்தியை இறைவன் "அதிகார நந்தி" எனப் பட்டமளித்து காவலர் பொறுப்பை ஒப்படைத்தார். இறைவனின் முன் மூன்று கால்களை மடக்கி, ஒரு காலை நிமிர்த்தி, அவரின் வயிற்றுப் பகுதியான தொப்புள் பாகத்தை உயர்நிலையாகக் கொண்டு, அந்த இட மட்டத்தின் நேராக மூக்கு அமையும் வண்ணம் அமர்ந்து நந்தீஸ்வரர் பணி செய்கின்றார். நந்தீஸ்வரருக்கு மகிழபாடியில் சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் திருமணமும் இறைவன் செய்வித்தார். இதை புகழ்மிக்க சப்தஸ்தான விழாவாக சித்திரை மாதத்தில் வருடாவருடம் ஏழு

தலங்களும் சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடுகின்றன.

தருமபுர ஆதீனம் பராமரிக்கும் இத்தலத்தை ஆகாயவிமான மூலம் திருச்சிராப்பள்ளி சென்று அடையலாம். தஞ்சாவூர் புகையிரதநிலையம் சமீபமானது. தஞ்சாவூர் கும்பகோணம் சாலைக்கு பேருந்து வசதி இருக்கின்றது. சுலபமாக அடையலாம்.

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன் .

- அப்பர்

**திருவையாறு ஆராதனை:**



உலகெலாம் திருவையாற்றை ஒலிக்க, ஓங்க, பரவச் செய்தவர் இசைமேதை தியாகராஜ சுவாமிகள். இவர் கர்நாடக இசையில் தனி இடம் பெற்ற பிராண நாயகர் ஆவார். சங்கீதத்தால் முத்திபெறலாம் எனக்கூறி இராம தரிசனம் பெற்ற நாத சோதியாகும். "பிறந்தாலே முத்தி" எனும் திருவாரூரில் 1767 ஆம் ஆண்டிலிருந்து, மண்ணை மிதித்தாலே முத்தி என்ற திருவையாற்றில் வாழ்ந்து, இசையில் மூழ்கி, நனைந்து புகழீட்டி 1847 இல் இறையடி சேர்ந்தார். இசை ஞானியாகிய இவரின் சமாதி காவேரிக்கரையில், திருவையாற்று பதிக்கருகில் உளது. மக்கள் இவரைச் சங்கீத தெய்வமாக மதித்து நினைவாக ஆலயமும் அமைத்துள்ளனர்.

தியாகராஜ சுவாமிகளது "பஞ்சரத்ன கீர்த்தனை" என்ற ஐந்தும் மிகப் பிரபலமானவை. தைமாதத்தில் வரும் பிறந்த நாளில் கர்நாடக இசைப் பிரபல பாடகர்கள் யாவரும் திருவையாற்றிற்குப் படையெடுத்து ஒரு முகமாகக் கீர்த்தனை பாடி, தமது அஞ்சலியை ஐந்து நாள்கள் செய்வர். தியாகராஜ ஆராதனை, சென்னையிலும், உலகெங்கும் இந்நாள்களில் நடை பெறும். எமது இலண்டன் சைவ முன்னேற்றச்சங்கத்திலும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. தனக்கென ஒரு பொருளும் தேடாது, சேமிக்காது, இலவசமாக மாணாக்கர்களுக்கு சங்கீதம் கற்றுக் கொடுத்தவர் தியாகராஜ சுவாமிகள். இந்த ஆண்டு 02-02-2021 அன்று நடைபெற்றது 174 ஆவது தியாகராஜ ஆராதனையாகும்.

இசை மும்மூர்த்திகளில், மும்மணிகள் என்று கூறினால் இவரே முன்நிற்பார். ஏனைய இருவர் சியாமாசாஸ்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆவர்.

**பிரம்மசிரக் கண்டீஸ்வரர் ஆலயம்:**
திருவையாறு ஐயாறப்பர் கோயிலிலிருந்து 3 கி.மீ தூரத்தில், திருக்கண்டியூரில் இவ் ஆலயம் இருக்கிறது.

இறைவன் : பிரம்மசிரக் கண்டீஸ்வரர், பிரமநாதர், வீரட்டேஸ்வரர்.
இறைவி : மங்களநாயகி

தலமரம் : வில்வம்

தீர்த்தம் : நந்தி தீர்த்தம், பிரம தீர்த்தம்.

பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைத் தனது சூலத்தால் கண்டனம் (கொய்தல்) செய்த படியால் கண்டியூர் என பெயர் பெற்றது. அட்டவீரட்டத்தலங்களுள் இதுவும் ஒன்று.

வானவர் தானவர் வைகன் மலர் கொணர்ந் திட்டிறைஞ்சித்
தானவர் மால் பிரம்மன் னறியாத தகைமையினான்
ஆனவனாதி புராணன் அன்றோடிய பன்றியெய்த
கானவனைக் கண்டியூர் அண்டவாணர் தொழுகின்றதே

- அப்பர்

மேற்கு நோக்கிய ஐந்து நிலைகள் கொண்ட கோபுரம், கொடிமரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன. தனி அம்பாள் சந்நிதி, விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகன், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தங்கள் உள.

பிரம்மனுக்கு மூலவருக்கு பக்கத்தில் தனிக்கோயில் உளது. பிரமன் அமர்ந்த திருக்கோலத்தில் நான்கு முகங்களோடு பூ, ஜபமாலை இருகைகளிலும் ஏந்திப் பிரார்த்திக்கும் அமைப்பில் அழகாக காட்சியளிக்கின்றார். இவரைத் தங்கள் தலை எழுத்து சரியில்லை என நினைப்போர் வழிபட்டு மாற்ற முயல்வர். மேலும் பிரம்மகத்தி பிடித்தோரும் நிவாரணத்திற்காக வணங்குவர். பிரமனோடு அருகில் சரஸ்வதி அருள் பாலிக்கின்றாள். சரஸ்வதிக்கு வெண்ணிற ஆடை கொடுத்து மாணவர்கள் கல்வியில் சிறப்புற வேண்டுவர்.

இவ்வாலயம் சப்தஸ்தலத்திலும் ஒன்றாகும். ஐந்தாவது இடத்தில் இருந்து முன்னர் நந்தி கல்யாணத்துக்கு ஆபரணங்கள் கொடுத்ததாக ஐதிகம்.

தமிழ் நாட்டில் பிரமனுக்கு அதிக ஆலயங்கள் இல்லை. ஆதலால் திருவையாறு செல்பவர்கள் பிரம்மா, சரஸ்வதியை இங்கு தரிசிப்பதும் புதுமையும் நன்மையுமாகும்

**சப்தஸ்தலங்கள்**

சப்த என்றால் ஏழு. ஸ்தலம் = இடம். திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகியவை இவை. நந்தி பெருமான் திருமண வைபவம் பல வருடங்களாக கொண்டாடப்படுகிறது. “நந்திக்கல்யாணம் முந்திக்கல்யாணம்” என்ற தொடர், திருமணமாகாதோர் இவ்விழாவில் கலந்தால் திருமணம் நடக்கும் என்பதையே குறிக்கின்றது. ஐயாறப்பர், அம்பாள் சகிதம் இதர தலங்களுக்கும் சென்று, அத்தலங்களிலுள்ள தெய்வங்கள் பின்வர திருவையாறு ஆலயத்திற்கு திரும்புவதும். ஏழு கோயில்கள் திருமணத்தின் போது சேர்ந்து செய்வது தம்பதிகள் ஏழடி வைத்தல் போல் இருப்பதும் ஆனந்தம் ஆனந்தமே!.

**திருச்சிற்றம்பலம்**

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி**
**அலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிரமழையென்றஞ்சிச்**
**சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே**

**- திருஞானசம்பந்தர்**

***திரு 1 பதி 130 பா 1***

# திருவாசகத்தில் இசை மரபு

திரு. க. குணரத்தினம்

ஆசிரியர், டிறிபேக் கல்லூரி,சாவகச்சேரி

"இசை கேட்டால் புவி அசைந்தாடும்" என்பதற்கு அமைய, இசையாலே இறைவனைப் பாடி, இசைவடிவிலே இறைவனைக் கண்டு இன்புற்று, இனிய தமிழ்ப் பாடல்களால் பக்தி உணர்வு பிரவாகிக்கப் பாடியவர்களே எமது மெய்யடியார்கள். பண் சுமந்த தமிழ்ப் பாடல்களால் இறைவனை அர்ச்சித்து இறைவனை அகத்திலே எழுந்தருளச் செய்த திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் எல்லோருமே இறைவனை இசை வடிவில் கண்டு பாடிப் பரவியுள்ளனர்.

திருஞானசம்பந்தர், "பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழ் அவையும்" என்று பாடியுள்ளமையும், திருநாவுக்கரசர், "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" எனப் பாடியமையையும் இங்கு நினைவுகூரத் தக்கன. ஆனால் மாணிக்கவாசகர் இறைவனை இசை வடிவினனாகக் கண்டதோடு இசையாலே போற்றியும் பாடியுள்ளமையைத் திருவாசகத்தினூடே அறிந்து கொள்ள முடிகிறது.

திருவாசகமே பக்தி இலக்கியங்களில் தனித்துவமான ஒன்றாக மிளிர்கின்றது. அதாவது பல்வேறு பாடல் வடிவங்களையும், இசை நுணுக்கங்களையும், அமைப்பு முறைகளையும் திருவாசகத்தில் காணமுடிகிறது. திருவாசகம் பொதுவாக "மோகனம்" என்ற இராகத்தில் பாடப்படுவது மரபாயினும் திருப்பள்ளியெழுச்சி அதிகாலையில் பாடப்படுவதால் "பூபாளம்" இராகத்திலும், திருப்பொன்னூசல் "நீலாம்பரி" இராகத்தில் பாடப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருவம்மானை, திருதெள்ளேணம் என்பன நாட்டார் ஓசை மரபுகளைக் கொண்டமைந்தமையால் அதற்குரிய பண்களில் பாடுவதையும் காணலாம்.

திருப்பள்ளியெழுச்சியிலே அதிகாலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி நீராடி வந்து இறைவனைத் துயில் நீங்குமாறு வேண்டிப் பாடுகின்றபோது,

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்"

என இசையோடுகூடிய வழிபாடு செய்வதைக் காட்டுகின்றார்.

ஆனந்த அதீதத்தில் பேரானந்தப் பரவசம் கொண்ட மணிவாசகர், திருச்சதகத்தில்,

"பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி நெக்குநெக்(கு)
ஆட வேண்டும்"

எனத் தனது மனம் எண்ணுவதை அன்பு கனியப் பாடியுள்ளார்.

திருவெம்பாவைப் பாடலில்,

"வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி"

என இறைவனைப் பண்ணோடு பாடிப்பரவுகின்றார்.

இவ்வாறே திருப்பொற்சுண்ணத்திலே,

"அயன்தலைக் கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி"

என்றும், 4, 12, 15ஆம் பாடல்களின் இறுதியிலே

"பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே"

எனப் பாடுவதும் இசையாலே இறைவனைப் போற்றுவதாகவே அமைந்துள்ளது.

திருத்தெள்ளேணம் என்பது பெண்களும் ஆண்களும் சேர்ந்து வேலை செய்து, ஆடிப்பாடிக் களிக்கின்ற ஒரு நாட்டார் மரபியலை இழையோட விட்டிருப்பதனால், அந்தப் பாங்கிலே பாடல் வரிகளை அமைத்துப் பாடியுள்ளார் மணிவாசகர்.

"திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"
"திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"
"திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என அந்த நாட்டார் மரபியல் பாணியிலே பாடியிருப்பது கவனிக்கத்தக்கது.

திருப்பூவல்லிப் பகுதியிலே பெண்கள் சேர்ந்து பாடி ஆடி இறைவனுக்கு மலர் எடுக்கும் பாங்கிலே பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "பூவல்லி கொய்யாமோ" என வருகின்றபோது,

".......அம்பலத்தேயாடுகின்ற
புனையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ"

என்றவாறே ஒவ்வொரு பாடலடிகளும் அமைந்திருப்பதைக் காணலாம்.
திருப்பொன்னூசலிலே,

"துஞ்சல் பிறப்பறுப்பான் தூயபுகழ்பாடி
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ"

எனப் பாட்டிசையில் இறைவனை ஊஞ்சலிலே கொலுவிருத்திப் பாடிப்பரவி வேண்டல் செய்வதைக் காணலாம்.

திருவாசகத்தின் மற்றுமோர் பகுதியான திருப்படையாட்சி மணிவாசகரின் இசை நுணுக்கத்தின் வேறொரு பொக்கிஷமாகத் துலங்குகிறது. தனது பக்தியின் நிலைமாற்றத்தை படிப்படியாக பாடி உச்ச நிலைக்கு கொண்டு செல்லும் மணிவாசகர் வலைஞனாக வந்த இறைவன் தன்னை ஆட்கொள்ளாமல் விட்டுவிடுவானா; தனது வேண்டுகோள் எல்லாம் கிடைக்காமல் போய்விடுமா? என மெய்யுருகிக் பாடுகின்றார்.

"கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படு மாகாதே"

இப்படியே "ஆகாதே" என்ற இயைபுத் தொடை ஓசையுடனேயே கடைசிப் பாடல் அடிவரை அமைந்துள்ளது. பின்னரும் "பண்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடுமாகாதே" என இறை வனிடம் வேண்டும் மணிவாசகர்,

"இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக இயம்பிடும் ஆகாதே" என்கிறார்.

அதாவது இன்னியம் என்பது பல்வேறு இசைக்கருவிகள் கொண்டு இசைப்பது.. இது அக்காலத்தில் சீர்வரிசைக்கான வாத்தியக் குழுவையும் குறித்து நிற்கிறது. தற்போது கீழைத்தேய வாத்தியங்களைக் கொண்டு "இன்னியம்" என்ற பாரம்பரிய மரியாதை வாத்தியக் குழுக்களைச் சில பாடசாலைகளில் காணலாம்.

இவ்வாறு இன்னிய வாத்திய இசை முழங்க வேண்டும் எனக் கேட்கும் மணிவாசகர்,

"வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடுமாகாதே" என்கிறார்.
அத்தோடு,

"சங்கு திரண்டு முரன்றெழு மோசை தழைப்பன ஆகாதே" என்கிறார். அதாவது வீணையொலியானது மேலோங்கித் தனக்கு இன்பம் அளிப்பதோடு சங்கின் ஒலியானது மேலோங்கி ஓங்கார நாதமாய் ஒலிக்க வேண்டும் என்கிறார்.

இவ்வாறு இசைப்பாடல்களை இசை நுணுக்கங்களோடு பல்வேறு சமயங்களிலே பாடிக் களித்ததோடு இறைவனை இசையாலே பாடிப்பரவி பேரானந்தம் அடைகிறார்.

இப்படியாகப் பாடிப் பரவுவது இறைவன் சேவடியன்றி வேறில்லை என்பதை,

"பாடிமால் புகழும் பாதமே யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்"

என்கிறார். எனவே மணிவாசகரின் திருவாசகம் 51 பதிகங்களுமே வெவ்வேறு ஓசைப்பண்புகளையும், இசை நுணுக்கங்களையும் சந்த நயங்களையும் கொண்டு விளங்குவதால்தான் ஏனைய பாடல்களைவிட திருவாசகப் பாடல்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஆகவேதான் "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னோர் காரணமும் இருக்கிறது. மணிக்கவாசகர் ஞானநெறி நின்று இறைவனைக் கண்டவர். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். அதே இறைவனைப் பின்னர் காணவும், அவரை அடையவும் கழிவிரக்கத்தோடு பாடியமையால்தான் மணிவாசகரின் பக்தி உள்ளத்தை வருடிச் செல்கிறது. அதற்கு மேலும் மெருகூட்டுவதாகக அமைவது அவர் கையாண்ட இசைமரபே ஆகும்.

# நாயாகப் பிறப்பது ஏன்?

**இராமர் தனது அரசவையில் அமர்ந்திருந்தார். அப்போது வெளியில் நாயொன்று பெரிதாகக் குரைத்தவண்ணம் இருந்தது. காரணத்தை அறிந்துவருமாறு காவலனை அனுப்பினார் இராமர். அவன் அந்த நாயைத் துரத்திவிட்டு, "காரணமின்றிக் குரைத்த நாயைத் துரத்திவிட்டேன்" என்றான். நாய் மீண்டும் வந்து குரைக்கத் தொடங்கியது. இம்முறை இராமர் தம்பி இலக்குவனை அனுப்பி, நாய் குரைப்பதன் காரணம் அறிந்துவரச்சொன்னார். இலக்குவனும் நாயை அணுகி, "நீ குரைக்கும் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு அந்த நாய் ஈனக்குரலில்,"இராமரை வரச் சொல்லுங்கள். எனக்கு நீதி வேண்டும்" என்றது. பதிலால் ஆச்சரியம் அடைந்த இலக்குவன் உள்ளே சென்று இராமரிடம் இதைச் சொன்னான். உடனே இராமர் வெளியே வந்து நாயை அணுகி, "எனது இராய்ச்சியத்தில் எவரும் துயரப்படக்கூடாது. ஆகவே நீ தயக்கமின்றி நடந்ததைச் சொல்" என்றார். "என்னைச் சந்நியாசி ஒருவர் கல்லால் அடித்து எனது காலை உடைத்துவிட்டார், எனக்கு நீதி வேண்டும்" என்று அந்த நாய் இராமரைப் பணிவாக வணங்கி முறையிட்டது. இராமர் கனிவான குரலில், "வருந்தாதே! நான் இப்போதே இதை விசாரிக்கிறேன்" என்று கூறியதோடு சந்நியாசியை அழைத்துவர உத்தரவிட்டார். சற்று நேரத்துள் சந்நியாசி அங்கு வந்தார். அவரிடம் இராமர், "இந்த நாயை எதற்காக் கல்லால் அடித்தீர்கள்?" என்று அவரிடம் கேட்டார். "இந்த நாய் நான் பிச்சை வாங்கிக்கொண்டு வரும்போது எனது பிட்சான்னத்தைத் தொட முயன்றது. மிகவும் பசியுடன் இருந்த எனக்கு அதனாற் கோபம் வந்தது. அதுதான் அடித்தேன்" என்று சந்நியாசி பதிலளித்தார். இராமர் புன்னகைத்து அவரை நோக்கி, "இந்த நாய் ஐந்தறிவு படைத்த பிராணி, தனக்குத் தேவையான உணவைத் தயாரிக்கவோ பெறவோ அதற்கு வழி தெரியாது. பார்க்கும் உணவையே உண்ணத் தோன்றும். இதுதான் ஐந்தறிவு உயிரினங்களின் விதி. உங்களுக்குப் பசி இருப்பதுபோல அதற்கும் பசிக்கும். அதனால் இது நாயின் தவறன்று. பசித்தவனுக்கு உண வளிக்கவேண்டும் என்பது ஆறறிவு உடைய மனிதனுக்கான தர்மம். நீங்கள் அந்தத் தருமத்தை மீறியதும் அல்லாமல் கல்லாலும் அடித்துவிட்டீர்கள். எனவே அது குற்றம். அதற்கான தண்டனையை நீங்கள் அநுபவிக்கவேண்டும்" என்ற இராமர் நாயின் பக்கம் திரும்பி, "இவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று பாதிக்கப்பட்ட நீ சொல், நான் அதை நிறைவேற்றுவேன்" என்றார். அதற்கு நாய், "இவரை ஒரு சிவாலயத்தில் அதிகாரவேலையில் அமர்த்துங்கள். அதுவே இவருக்கு நான் அளிக்கும் தண்டனை" என்றது. தண்டனை உடனே நிறைவேற்றப்பட்டது. சந்நியாசியும் மகிழ்ச்சியுடன் சென்றார்.**

**(தண்டனைக்கான காரணம் - பக்கம் 22)**

# பாம்பன் சுவாமிகள்

## திருமதி அமிர்தா தியாகலிங்கம்



சென்ற இதழ்த் தொடர்ச்சி....

குறி சொல்பவள் வந்து போன பின், சில நாள்களில் வாந்தி பேதி நோய்க்கு ஆளான சுவாமிகள் நினைவிழந்த நிலையில் இருந்ததைக் கண்ட மனைவியார், சுவாமிகள் இறைவனடி சேர்ந்துவிட்டார் என எண்ணி அழுதழுதே மயங்கினார். காவியுடைதரித்த ஒருவர் தோன்றி, "கோலினால் அவரைத் தட்டி எழுப்பிக் கவலையை ஒழி. அவன் உயிருடன் உள்ளான். வீபூதியை எடுத்து நெற்றியிலும் நெஞ்சிலும் பூசு. எழுந்துவிடுவான்" என்று கூற அவர் மனைவி, "நான் மாதவிலக்குடன் இருப்பதால் செய்ய இயலாது" என்றார். வந்தவர், "கஷ்டநேரத்தில் குற்றமில்லை முருகனை நினைந்து இரு" என்றார். மனைவி வீபூதியை உடம்பில் இட, கண்விழித்துச் சுகமானார்.

சில வழக்குகளில் வெற்றிபெற்றும் பல நூல்களைப் படித்தும், மணி மந்திரம், இரசவாதம், யோகம், தந்திரம் போன்றவற்றையும் அறிந்து கொண்டார். காந்தம் தன்முன் காணும் இரும்பை இழுப்பதுபோல் இறைவனும் தன்னைத் தேடி நாடி வருபவர்களைக் கவர்ந்து இழுத்துக் கருணை புரிகிறார் என்று சொல்லி, கண்ணுக்குத் தெரியாத கடவுள் உண்மையா என நினைத்த சேவுக் கிரியாரின் சந்தேகத்தைப் போக்க, சேவுக்கிரியார் சுவாமிகளைக் குமரகுருதாசர் என அழைத்தார். பின் சுவாமிகள் பல தலங்களைக் காஞ்சியிலும் குமரகோட்டத்திலும் தரிசித்தார். இக்காலத்தில் சில அற்புதங்களும் நிகழ்ந்தன. தீமிதித்தலைப் பற்றிய சந்தேகங்களைத் தன் இளவல் முத்தையாபிள்ளைக்கும், அவர் நண்பன் சேதுவுக்கும் விளக்கினார். முத்தையாபிள்ளைக்குச் சடக்கரமந்திரத்தைப் போதித்தார். சுவாமிகளின் தம்பி மரணமடைய, சுவாமிகளின் தாயார் சுவாமிகள்தான் மந்திரமோ மாயமோ செய்து கொன்றுவிட்டான் என இரவு பகலாகப் புலம்பினார். ஒரு நாள் தாயாரின் கனவில் வந்த முத்தையாபிள்ளை, "நான் நற்கதியடைந்துள்ளேன். அண்ணன்மீது வருத்தம் கொள்ளற்க. எனக்கு விருப்பமான பாயசம் காய்ச்சிப் படையலிடு. அதுவே போதும்" என்று கூறி மறைந்தார்.

சுவாமிகளின் நண்பர்கள் அவரின் கைரேகைச் சிறப்பை அறிந்தனர். சுவாமிகள் இயற்கையை ஆராய்ந்தும் சந்தேகமான விடயங்களுக்கு விடையும் கூறினார். திருவனந்தபுரத்தில் 22 நாள்கள் யாப்பிலக்கணத்தை நன்கு கற்ற சுவாமிகள் பல்சந்தப்பரிமளம் என்னும் பாடல் தொகுதியைப் பாடினார். பத்மநாத சுவாமியைத் தரிசித்தார். கன்னியாகுமரி, சுசீந்திரம், மதுரை, பாம்பன், இராமேஸ்வரம் போன்ற இடங்களில் ஆலயதரிசனம் செய்து பாடல்களும் இயற்றினார். கனவில் ஒருவர் தோன்றி, சாஷ்டாங்க நமஸ்காரம் ஆலயங்களில் செய்யவேண்டும் எனச் சுவாமிகளை

பணித்தார். சுவாமிகளுக்கு இன்னொரு முருகபக்தரான உத்தரகோசமங்கை கார்த்திகை சுவாமி களின் சந்திப்பும் நட்பும் கிடைத்தது அலாதியானது; அற்புதமானது.

சுவாமிகள் பாடிய நவரத்தினமீக்கூற்று போன்ற பாடல்கள் படிக்கச் சிரமமாக இருந்ததால் அடியவர்களுக்கு எளிய நடையில் திருவலங்கல் திரட்டு, திருக்குன்றக்குடிப்பதிகம் ஆகியவை பாடிக்கொடுத்தார்.

பிரப்பன் வலசை தவமும் முருகன் அருளும்:

(1894) விஜய ஆண்டு பங்குனி சனிவாரம் பிரப்பன் வலசையையடைந்த சுவாமிகள் ஒரு சதுரக் குழியை வெட்டச்செய்து, அங்கு கதவுடன் கூடிய சுற்றுவேலியும் மேலே கூரையும் போடுவிக்கப்பட்டது. வேலியில் ஒரு கை நுழையும் அளவு துவாரமும் இடப்பட்டது. அதனூடே மதியம் உப்பில்லா அன்னம் சிறிது வைக்கும்படியும், என்று அன்னம் அப்படியே இருந்தால் அன்றுமுதல் வைப்பதை நிறுத்தவும் சொன்னார். முருகனைக் கண்டால் திரும்புவேன்; அல்லால் திரும்பேன் என்று கூறிக் குழியினுள் சென்று நிஷ்டையில் அமர்ந்தார். பேய்கள், ஆவிகள், பயமுறுத்தி இடைஞ்சல் செய்தன. எல்லாவற்றையும் தாங்கித் தகர்த்த சுவாமிகள் (6ஆம் நாள்) ஆறாம்நாள் எழுக என்று சொல்தோன்ற, “முருகனே! நீயே உபதேசம் செய்யின் எழுவேன்” என வேண்டினார். ஏழாம் நாள் இரவு ஓர் அழகிய வாலிபன் இரு துறவிகளுடன் சுவாமிகள் முன்வந்து நின்று ஒரு ரகசிய மந்திரத்தை கூறி மறைந்தான். அவர்களை நினைத்து வணங்கித் தவத்தைத் தொடர்ந்தார். முப்பத்தைந்தாம் நாள் இரவு, “ஏகாதச உருத்திரர் வருகின்றார். நீ எழுந்துவிடு” என்று ஒலியும், ஒளியும் எழ, “முருகன் ஒருவன் கூற்றிற்கு மட்டும் தான் எழுவேன்” எனச் சுவாமிகள் கூற, “முருகனின் கட்டளை இது. எழுந்து கொள்” என வானில் இருந்து ஒலி வந்தது. சுவாமிகள் கைகூப்பி எழுந்து தரையில் வீழ்ந்து வணங்கி முருகனைத் துதித்தார். சுவாமிகள் மௌனமானார். அடியார்கள் பேசும்படி வேண்டிக்கொண்டபோது, “பெரியபுராணத்தில் கயிறு போடுங்கள். சம்பந்தர் புராணம் வந்தால் பேசுவேன்” என உரைத்தார். கயிறு போட்ட போது சம்பந்தர் புராணம் கண்டனர். சுவாமிகளும் பேசினார்கள். வலசையில் இருந்து பாம்பனை அடைந்த சுவாமிகளை மக்கள் வந்து வணங்கித் திருநீறும் ஆசியும் பெற்றுச் சென்றார்கள். பதினைந்து திங்கள் பாடாமல் அதிகம் மௌனமாகக் காலத்தைத் கழித்தார். பின் மன்மத ஆடியில் தலயாத்திரை தொடங்கிப் பல ஊர்களுக்கும் கோயில்களுக்கும் சென்று பல பாடல்களைப் பாடியும் பக்தர்களுக்கு அருளாசி புரிந்தும் பாம்பனுக்குத் திரும்பினார்.

சுவாமிகளின் துறவு:

சுவாமிகள் துறவு நோக்கில் மன்மதஆண்டு (1895)கார்த்திகை மாதம் யாரிடமும் கூறாமல் கடற்கரை சென்று ஒரு சிறுபடகில் அமர்ந்ததை கண்ட அன்பர் சின்னசாமிப்பிள்ளை இவருடைய மகன் முருகையாபிள்ளையையும் கூட்டிச்சென்று சுவாமிகளிடம், “நீங்கள் துறவு பூணப் போவதாயின் முருகையா மயங்குகிறான். இதற்குத் தங்கள் பதில் என்ன?” எனக் கேட்க, முருகன் பார்த்துக்கொள்வான் எனக் கூறி, பாம்பனுக்கு இனி வராமல் முருகன் பாதம் அடைந்து விடுவேன் என்று சொல்லிப் படகில் சென்று பிரப்பன்வலசை அடைந்தார். தாயாரைப் பார்த்து, “எனக்கு விடைகொடு, முருகனை மறவாதிரு, அவன் உன்னை காப்பாற்றுவான்” என்றுகூறி வணங்க, தாயாரும் இவரின் உறுதியை கண்டு விடை கொடுத்தார்.

பின் சுவாமிகள் இராமநாதபுரம் சென்று குதிரை வண்டியில் மானாமதுரை சென்றார். வரும்போது வழியில் சுவாமிகளின் ஒரு பாதம் தரையில் மோதிக் காயம் ஏற்பட்டு வீக்கமும் வலியும் கண்டது. இங்கு சுவாமிகள் அறம் வளர்த்த நாதபிள்ளை வீட்டிற்குச் சென்றார். நாதபிள்ளையின் தாயார்

அவரை வணங்கி வரவேற்று மகன் சிவகங்கை போயுள்ளதாகச் சொல்லி உபசரித்தார். சிவகங்கையில் பிள்ளையின் கனவில் முருகன் வந்து, “உன் வீட்டில் பாம்பன் சுவாமிகள் காலில் அடிபட்டுக் காயத்துடன் இருக்கான். நீ போய் அவனைப் பார்” எனக் கூற, அடுத்த நாளே வீடு வந்த பிள்ளையவர்கள் ஒரு ஆங்கில வைத்தியரைக் கொண்டு சுவாமிகளுக்குச் சிகிச்சை கொடுக்க, ஒரு வாரத்தில் காயமும் ஆறியது. பின் மழவராயனேந்தல் ஊர்சென்று சேர்வைக்காரர் என்ற பக்தர் இல்லத்தில் பதினைந்து நாள்கள் இருந்து பின் திருவாரூர் சென்று இறைவனைத் தரிசித்து மதுரைக்கு வந்தார்.

மயிலோன் ஏற்பாடு, மதராஸ்(சென்னை) வருகை:

புகை வண்டியில் ஏறிச் சென்னைசெல்ல அமர்ந்த சுவாமிகளின் மனதில் கவலையும் கண்ணில் கண்ணீரும் வந்தது. “முருகா நான் இதுவரை சென்ற இடம் எல்லாம் தெரிந்ததாகவும், தெரிந்தவர்களும் இருந்து உறுதுணை புரிந்தனர். வச்சிரபாணியாய், சத்தியபாணியாய், தண்டபாணியாய், தயாசித்துவாய் இருக்கும் முருகா! இதுவரை எனக்கு உதவினாய். தெரிந்தவர் அறிந்தவர் இலாப் பட்டினம் செல்கிறேன். என்கதி என்னவாகும்?” எனக் கலங்கினார். புகைவண்டியும் மறுநாள் காலை சென்னையை அடைந்தது. முருகன் ஏற்பாட்டின்படி யாரோ ஒருவர் வந்து குதிரைவண்டியில் ஏற்றி 41 வைத்தியநாதமுதலி தெரு விலாசத்திற்கு சுவாமிகளை கொண்டு சென்றார். அவ்வீட்டு அம்மையார் சுவாமிகளை இன்முகத்துடன் வரவேற்று மேல்தளத்திற்கு கூட்டிச்சென்று உங்கள் திருமுகம் எனது கனவில் தந்து உணவு கொடுக்குமாறு கேட்டது என கூறினார். அம்மையார் சுவாமிகளை தன் மகன், மருமகள் உட்பட கூடிய எல்லோருக்கும் அறிமுகம் செய்தார். சுவாமிகளும் முருகனின் திருஆடல்களை எண்ணி மகிழ்ந்தார்.

சுவாமிகள் அம்மையாரின் வேண்டுதலுக்கிணங்கத் திருவாறெழுத்தை உபதேசித்துக் குமாரானந்தம் தீட்சையும் கொடுத்து, அவரை குமாரானந்த அம்மையார் என அழைத்தார். அம்மையார் தியானத்தில் இருக்கையில் மயில்மேல் இருக்கும் முருகனைக் கண்டார். பின் அம்மையார் சுவாமிகளிடம் காவி வஸ்திரம் வேண்டி முருகன் தியானமே கதியாக இருந்தார். சுவாமிகள் குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதியில் அம்மையை பின்வருமாறு பாடியுள்ளார்.

கொள்ளச் சயிலா கள்ளிப் பழமுங் கொண்டேன் பசித்தோர்நாள்
எள்ளத் தனையு மன்பிற் பிரியா வியல்பும் பத்தியுமோங்
குள்ளக் குமரா னந்தப் பெயர்மா துணவீ யாவிடினென்
பொள்ளற் சடநில் லாதே சென்னைப் புகழும் மாதைக்கா.

மறுவருடம் துர்முகி ஆண்டில் சிதம்பரம் சென்று ராஜா முத்துக்கிருஷ்ணநாயுடுவுடன் இருந்தார். இக்காலத்தில் பரிபூராணந்தபோதம் (230பாடல்), தகராலயரகசியம்(117பாடல்), கந்தரொலியந்தாதி, குகப்பிரம அருட்பத்து என்பன பாடிக்கொடுத்தார். 1897 தஞ்சாவூர் சென்று மாசிமகாமகத்தில் கலந்துகொண்டார். சனநெருக்கடியில் சிரமப்பட்டார். பின் சுவாமிமலை சென்று முருகனைத் தரிசித்து, சிதம்பரம் திரும்பி 1101பாடல் பாடி திருப்பா என்னும் நூலைப் படைத்தார். தூத்துக்குடி சென்றபோது ஏற்பட்ட இருமலுக்கு முருகனை வேண்ட ஆங்கிலேயர் போல் முருகன் ஓர் வாலிபனுடன் வந்து மருந்து கொடுத்து நோய் தீர்த்தார்.

சுவாமிகள் பிறஉயிர்கள் மீது கருணைமிக்கவர். திருநெல்வேலியில் ஒரு அன்பர் வீட்டில் தங்கியபோது அவ்வீட்டுச்சிறுவன் ஒரு மூட்டைபூச்சியை நெரித்து கொன்றுவிட்டான். இதைக்கண்ட சுவாமிகள் மரணம் ஏற்பட்ட இந்தவீட்டில் இன்று உண்ணமாட்டேன் என்றுகூறி அடுத்தநாள்

மதியம்தான் உணவு எடுத்தார். சில காலத்தின் பின் மீண்டும் இவ்வீட்டிற்கு வந்த சுவாமிகள் அவ்வீட்டு அம்மையாருக்கு திருவாறெழுத்தை உபதேசம் செய்து, தேள்விஷம் போக்கும் பச்சிலையைக் காண்பித்தார். பின்நாள்களில் பலரின் தேள்கடியை அவ்வம்மையார் நீக்கினார். சுவாமிகளின் கந்தகோட்ட மும்மணிக்கோவை பாடல்களைப் பார்த்த புலவர் ஒருவர் பிழை இருப்பதாகக் கூற, இலக்கியங்களின் விதி முறைகளைப் புலவருக்குக் கூறித் தெளிவுபடுத்த, புலவரும் தன் பிழையை உணர்ந்தார். பின் குற்றாலம், பாபநாசம் ஆகிய இடங்களுக்கு சென்று தரிசனம் செய்தார். பொதிகை மலையில் வாணதீர்த்தத்தில் நீராடினார். பின் சிதம்பரம் திரும்பிஇருந்த நிலையில் சென்னை செல்லுமாறு முருகன் கட்டளையிட, சென்னை வந்தார். பலர் வந்து தரிசித்துப் பலனடைந்தனர். பக்கத்து தெருவில் இருந்த ஏகான்மவாதி, உமாபதி சிவாசாரியார் ஒரு பேதவாதியென்றும், பட்டினத்தார் கல்லானாரே என்றும் அவதூறு பேசினார். இதைக்கேட்டு வருத்தமுற்ற சுவாமிகள் உமாபதிசிவாசாரியாரின் பெருமையையும், பாழும் உடலை சிவலிங்கமாக்கிய பட்டினத்தாரின் தவத்தின் உயர்வையும் காட்டி, பின்வரும் இரு பாடல்கள் பாடினார்கள். இவை பக்தர்களை மகிழ்விக்கின்றது.

திருநிறைந்த பார்வையினாற் றேடரிய மோக்கமதை
உருநிறைந்த வொருசாம்பா னென்பாற்கு மோர்செடிக்கும்
அருணிறைந்தன் றீந்தவறா வருளாளன் றனையொருவன்
இருணிறைந்திங் கெள்ளியதூஉ மென்கொல்லோ வெம்பரனே

பிணமாகிக் கழியுடம்பைப் பேரருளா லிலிங்கமெனப்
பணுந்தகையோ னுடையாவி எப்பொருளாய்ப் பம்புமென
எணுந்தகையில் லாவொருவ னேசறுவெண் காடரையோர்
தணிந்தகல்லா யினரெனவே தாழ்த்தலென்னோ வெம்பரனே

திருவொற்றியூர் சென்று பட்டினத்தடிகளார் சமாதியை வழிபட்டு, பின் இராயபுரத்தில் குணங்குடியார் சமாதியையும், திருமயிலை, திருவான்மியூர் கோயில்களையும் சென்று வழிபட்டார். இக்காலத்தில் அமிர்தமதினுஞ்சிறந்த என்று ஆரம்பிக்கும் கந்தசாமி பதிகத்தையும் பாடினார்கள்.

அன்னை முருகன் பாதமடைதல்:

அன்னை செங்கமலத்தாயார் சிவபதம் அடைந்ததும், இவர் மகன் முருகையாபிள்ளையை இறுதிக் கடன்களை செய்ய அறிவித்துவிட்டு, முருகனிடம் தன்தாயாருக்கு நற்கதி கொடுக்கும்படி வேண்டினார்.

சென்னையை சேர்ந்த பக்தவத்சல முதலியாருக்கு, குமாரானந்த அம்மையாரின் சிபாரிசுக்கு ஏற்பவும் முதலியாரின் வேண்டுதலுக்குமாகவும் விதி பிசகாது திருவாறெழுத்தை உபதேசித்து, சுவாமிகள் காசியாத்திரை தரிசனத்தின் பின் காவியுடை கொடுத்து குகப்பிரமதாசர் என்று தீட்சாநாமமும் சூட்டி முதலியாருக்கு அருளாசி புரிந்தார்.

ஆனித்திருமஞ்சனம், மார்கழித்திருவாதிரை காலத்தில் சிதம்பரம் சென்று தரிசனம் செய்து மகிழ்வார். இக்காலங்களில் திருப்போரூர், திருத்தணிகை, திருமயிலம், திருக்கழுக்குன்றம், திருமயிலை, திருவொற்றியூர் போன்ற திருத்தலங்களுக்கும் சென்று வணங்குவார். கழுகுமலைபாதி, கந்தகிரிபாதி பிரபந்தங்களையும் பாடினார். பின் காசியாத்திரை செல்ல விரும்பி சென்றார்.

# ‘அழுதால் அவனைப் பெறலாமே’

**-அநுஜா-**

அப்பர்சுவாமிகள் திருமுறைகள் அருளிய நான்கு நாயன்மார்களில் ஒருவர். இவரைத் திருநாவுக்கரசு நாயனார் என்றும் குறிப்பிடுவர்.

அப்பருக்குப் பெற்றோர் வைத்த பெயர் மருணீக்கியார். இவரின் பெற்றோர் இவர் சிறுவனாக இருந்தபோதே இறந்துவிட்டனர். இவரின் அக்கா, திலகவதியார்தான் இவரைத் தன் பிள்ளை போலப் பாசத்துடன் வளர்த்தார். திலகவதியாருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் கணவனாகவேண்டியவர் போருக்குச் சென்று இறந்துவிட்டதால், தானும் உயிர்துறக்கத் திலக வதியார் துணிந்தார். ஆனால், தன்னுடைய தம்பிக்காக அந்த முடிவை மாற்றிக்கொண்டார். அந்தக் காலமுறைப்படி அவர் மறுமணம் செய்யவும் விரும்பவில்லை. தன்னுடைய தம்பியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்தார். திலகவதியார் கடவுள்மீது மிகுந்த பத்தி கொண்டவர். மருணீக்கியாரும் அக்காவுடன் கோயிலுக்குச் சென்று இறைவனைப் பத்தியுடன் வழிபட்டு வந்தார். இளைஞன் ஆகியதும் சமண சமயத்தின்பால் ஈர்ப்பு ஏற்பட்டுச் சமணராக மாறினார். அப்போது அந்த நாட்டை ஆண்ட அரசனும் சமணசமயத்தைத் தழுவியிருந்தான். அதனால் மக்களும் பலர் சமண மதத்தையே சார்ந்து இருந்தனர்.

தன்னுடைய தம்பி சமணமதத்தைத் தழுவியது அக்கா திலகவதியாருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. அவர் அருகில் இருந்த திருவதிகை வீரட்டானம் என்ற கோயிலை அடைந்து அங்கே தொண்டு செய்துகொண்டு தங்கியிருந்தார். அப்படி இருக்கும்போது அங்குள்ள இறைவரைத் தினமும் வணங்கியதோடு தனது தம்பியை சைவனாக்கும்படி இறைவரிடத்தில் வேண்டினார். நாள்கள் சில கழிந்தன. ஒரு நாள் மருணீக்கியாருக்குக் கடுமையான சூலைநோய் பிடித்துக்கொண்டது. சமணர்கள் பலவித வைத்தியங்கள் செய்தனர். எதற்கும் நோய் குணமாகவில்லை. ஒருநாள் இரவு வயிற்றில் வலி அதிகரித்து மிகவும் தாங்க இயலாத அளவுக்கு அவரை வாட்டியது. அவர் அக்காவிடம் ஓடி வந்தார். அக்கா அவரின் நெற்றியிலே திருநீறு அணிந்து அவரைக் கோயிலுக்குக் கூட்டிச்சென்றார். அங்கு போனவுடன் மருணீக்கியார் இறைவனை வேண்டி, பத்துத் தேவாரங்களை அருளினார். அவரது நோய் மறைந்துவிட்டது.

அப்படி அவர் பாடிய பத்துத் தேவாரங்களுள், முதலாவது, “கூற்றாயினவாறு விலக்ககிலீர” என்று தொடங்கும் தேவாரம். அதில், “இறைவனே! நான் இதுவரை ஏதும் கொடுமை செய்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்க, ஒருவராலும் மாற்றமுடியாத கொடிய சூலைநோய் வந்து எனது குடலை வாட்டுகின்றது. என்னால் அந்த வலியைத் தாங்க முடியவில்லை. அந்த நோயை மாற்றும் சக்தி உனக்குமட்டுந்தான் இருக்கிறது. யமனைப்போல என்னைத் துன்பப்படுத்தும் இந்த நோயை மாற்றிவிட்டால், இரவும் பகலும் உன்னைப் பிரியாது உன்னடியில் உன்னை வணங்கிக்கொண்டே இருப்பேன்” என்று பாடுகிறார்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

இரண்டாவது தேவாரத்தில், "திருவதிகை வீரட்டான அம்மானே! எனது மனத்தை முற்றுமாக நீ இருக்கும் இடமாக மாற்றிக்கொண்டேன். அங்கே வேறெதற்கும் இடமில்லை. இப்படியான கொடிய நோயை நான் அநுபவித்ததே இல்லை. எனது வயிற்றைச் சுருட்டி முடக்குகிறது. விஷம்போல வந்து என்னைக் கொல்கிறது. நீதான் எனக்குத் தஞ்சம் அளித்துக் காப்பாற்றவேண்டும்" என்கிறார்.

நெஞ்சம் உமக்கே யிடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

மூன்றாவது தேவாரத்தில், "திருவதிகை அம்மானே! இறந்தவர்களை எரித்த சாம்பலை உடல் முழுவதும் பூசிக்கொள்பவரே! காளை வாகனத்தில் விரும்பி அமர்பவரே! வெள்ளை மாலையைத் தலையில் அணிந்தவரே! உம்மை வணங்குபவர்களின் பாவங்களைப் போக்கக்கூடியவரே, மண்டையோட்டில் பிச்சை எடுப்பவரே! உம்மைப் பரம்பொருளாக எண்ணி, உமக்கு என்றும் அடிமையாவேன். என்னைப் பீடித்த இந்தச் சூலைநோயைத் தீர்த்தருளவேண்டும்" என்கிறார்.

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூச வல்லீர்
பெற்றம் ஏற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

அடுத்து, நான்காவது தேவாரத்தில், "அன்னம் போன்ற நடையழகு உடைய பெண்கள் நிறைந்த திருவதிகையில் வீரட்டானக் கோயிலில் அமர்ந்திருக்கும் இறைவனே! நான் உம்மை வணங்கித் தொண்டு செய்யாமற் போனதால் நீர் எம்மீது கோபங்கொண்டு இந்த நோயை வரச்செய்துள்ளீர்கள். நான் எனது பிழையை உணர்ந்து உமக்கு அடிமையாகிவிட்டேன். சிறியவர்களின் பிழையை மன்னிப்பது பெரியவர்கள் அல்லவா? அதுபோல என்னை மன்னித்து எனது நோயைக் குணப்படுத்தவேண்டும்" என்று பாடுகிறார்.

முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்

பின்னை அடியேன் உமக்காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

“திருவதிகை வீரட்டானப் பெருமானே! இந்த ஆழமான குளத்தில் இறங்காமற் தடுக்கும் காவலர்கள் தமது கடமையைச் செய்யாது இருந்தவேளை கரையில் இருந்தவர்கள் நீந்தத் தெரியாத என்னை இந்தக் குளத்திலே தள்ளிவிட்டார்கள். வயிற்றில் மட்டுமன்றி, இந்த நோய் எனது உடலின் வேறு பகுதிகளையும் தாக்குகின்றது. அதனால் நான் கரையேற முடியாது தவிக்கிறேன். நீர்தான் எனக்குக் கருணைபுரிந்து என்னைக் கரையேற்றவேண்டும்” என ஐந்தாவது தேவாரத்தில் இறைஞ்சுகிறார்.

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

அடுத்து ஆறாவது தேவாரத்தில், “வீரட்டானத்து இறைவனே! பூவும் நீரும் கொண்டு உம்மை வணங்குவதை நான் மறக்கவில்லை. தமிழில் இசைபாடிப் போற்றுவதை நான் மறக்கவில்லை. இன்பம் வந்தபோதும் துன்பம் வந்தபோதும் நான் உம்மை மறக்கவில்லை. உமது பெயரை எனது நாவும் சொல்ல மறக்கவில்லை. இறந்தவரின் மண்டையோட்டிலே பிச்சை எடுத்து உண்பவரே! எனது வயிற்றில் புகுந்து என்னை வாட்டும் இந்தச் சூலைநோயைத் தீர்த்தருளவேண்டும்” என்று பாடுகிறார். (சமணத்தைத் தழுவியிருந்த காலத்தில் இவை எதுவும் செய்யாது இருந்ததையும் இனிமேல் இவற்றைத் தவிர்க்கமாட்டேன் என்பதையும் கூறுகிறது இந்தத் தேவாரம்)

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டு உழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

“வீரட்டான இறைவனே! உம்மைத்தவிர எனக்கு வழிகாட்ட வேறு எவரும் இல்லாத காரணத்தால் திருமணம் செய்து இல்வாழ்க்கை வாழவும் அதற்கான பொருளை ஈட்டவும் நான் நினைக்கவில்லை. எனது குடலைப் பிசைந்து எடுக்கும் இந்த நோயின் துன்பம் தாங்கவியலாது தவிக்கிறேன். நான் தொண்டனாக உமக்குப் பணிபுரியவேண்டும் என்று நீர் நினைத்தால் இந்த

நோயைப் போக்கியருளவேண்டும்". இது ஏழாவது தேவாரம் சொல்லும் தகவல்.

உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

எட்டாவது தேவாரத்தில், "வீரட்டான அம்மானே! வெண்ணிறச் சங்கினாலான குழைகளைக் காதில் அணிந்தவனே! எனது மனதில் வஞ்சனை ஏதும் இன்மையால் நான் இல்வாழ்வில் ஈடுபடவில்லை. சூலை நோயின் வேதனையால் எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. எனது துன்பத்தைத் தீர்க்க உம்மையன்றி வேறு எவரும் எனக்கில்லை. அதனால் நீரே என்னைக் காத்தருளவேண்டும்." என இறைஞ்சுகிறார் அப்பரடிகள்.

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்தடியேன்
வஞ்சம் மனமொன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமிலைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தே என்வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டாத்துறை அம்மானே

"பொன்போன்ற நிறமுடையவரே! முறுக்குண்ட சடையை உடையவரே, பிறைச் சந்திரனைத் தலையிலே சூடியவரே, துன்பம், கவலை, பிணி என்பவை என்னை அணுகாது தடுத்து எனக்கு அருள் புரியாவிட்டால், என்னைப்போன்றவர்கள் உம்மைத் துன்பம் தீர்க்கும் பெருமானாக எண்ணமாட்டார்கள். என்றாலும் உமது அன்பே எம்மக் காக்கும் என்பதை நாம் அறிவோம்."

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித்தெளியார்
அடியார் படுவது இதுவேயாகில்
அன்பே அமையும் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே

நிறைவுத் தேவாரத்தில், நீர்நிறைந்த கெடிலநதியின் கரையில் அமர்ந்த எம்பிரானே! முன்பு ஒருமுறை தக்கயாகத்தில் துன்பம் செய்யவந்த யானையின் தோலைப் போர்த்தவரே!, சுடுகாட்டில் நடனம் ஆடுபவரே! நீர் அமர்ந்த மலையினை இராவணன் அசைக்க முயன்றபோது அவனை நசுக்கி, பின் அருள் செய்தவரே! அப்படிப்பட்ட நீர் நான் இப்போது சூலை நோயின்

தாக்கத்தால் வாடும்போது என்னைக் காப்பாற்றாமல் இருப்பது சரியோ? என்னைக் காத்தருள வேண்டும் என்று வேண்டுகிறார்.

போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடு அரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டு அருள்செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என் வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே

இந்தப் பத்துத் தேவாரங்களையும் அப்பர் ஓதி நிறவை செய்ய, அவரின் சூலைநோயும் நீங்கியது. ஆண்டவனின் அருளை உணர்ந்து அப்பர் முன்போலச் சைவசமயத்தைத் தழுவி பல கோயில்களுக்கும் சென்று வழிபடலானார். அப்போது கோயிலைச் சுத்தம் செய்வதும், வீதிகளைச் சுத்தமாக்குவதும் ஆகிய சரியை வழிபாட்டைச் செய்துகொண்டு யாத்திரை செய்தார். ஒருமுறை திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரைச் சந்தித்தபோது அப்பரே என்று அழைத்தார். இறைவன் அவரை நாவுக்கரசு என்று அழைத்தமையின் அவர் திருநாவுக்கரசர் ஆனார்.

இந்தப் பதிகத்தை அன்புடனும் பத்தியுடனும் நம்பிக்கையுடனும் ஓதினால் நமக்கு வரும் குடல் நோய்கள் குணமாகும் என்பது சைவர்களின் நம்பிக்கை. சிலர் இதை அநுபவமாகக் கண்டிருக்கிறார்கள்.

## நாயாகப் பிறப்பது ஏன்?

***13ஆம் பக்கத் தொடர்ச்சி....***

**அரசன் தண்டனையை நிறைவேற்றிய மகிழ்ச்சியில் நாயும் அங்கிருந்து அகன்றது. “அன்னத்துக்காக அலையும் சந்நியாசிக்கு இந்த யோகமா? இது அதிஷ்டமேயன்றித் தண்டனை அன்று” என்று இதைப் பார்த்த மக்கள் வியந்தார்கள். மக்கள் இதை இராமரிடமே கேட்டார்கள். அனைத்தும் அறிந்த இராமர், நாயிடமே இதைக் கேட்போம் என்று சொல்லி, நாயை அழைத்துவரும்படி கூறினார். காவலாளிகள் நாயை அழைத்து வந்தார்கள். மக்கள் நாயிடமே காரணம் கேட்டார்கள். அதற்கு நாய், “சிவாலயத்தில் அதிகாரி என்று நான் கொடுத்த பணி முள்ளின்மேல் நிற்பதுபோல. சிவாலயம், மடம், கிராமம் போன்றவற்றில் தவறு செய்யும் அதிகாரிகள், பசு, அந்தணர், அநாதை களின் செல்வத்தை அபகரிப்பவர்கள், அரசனுடன் இருந்துகொண்டு அங்கு வரும் யாசகர்களைத் தடுப்பவர்கள், அந்தணிரின் உணவுப்பொருள்களை அபகரிப்பவர்கள் ஆகியோர் மறுபிறப்பில் நிச்சயம் நாயாகப் பிறப்பார்கள். சென்ற பிறவியில் நான் ஒரு மடாதிபதியாக இருந்து தவறிழைத்ததால் இப்பிறப்பில் நாயாகப் பிறந்தேன். என வேதான் சந்நியாசிக்கு இப்படியொரு தீர்ப்புச் சொன்னேன். இப்பிறப்பில் உணவு தராத சந்நியாசி சிவாலயப் பணியில் நல்ல விதமாக நடந்தால் என்னை அடித்த பாவம் தீர்ந்து நன்மையடைவார். ஆசையின் காரணமாக ஏதேனும் தவறிழைத்தால் நாயாகப் பிறப்பார்” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றது. அங்கிருந்த மக்களின் சந்தேகமும் அகன்றது.**

**கருத்து:**

**சிவாலயம், மடம், அரசு நிர்வாகம் போன்ற பதவியில் இருப்பவர்கள் தவறு செய்யக்கூடாது. பசு, அந்தணர், ஆதரவற்றோர் ஆகியோரின் செல்வத்தின்மேல் ஆசைப்படக்கூடாது. அரசனைக் காணவரும் யாசகர்களைத் தடுக்கக்கூடாது. உண்மையான அந்தணர்களின் பொருளை அபகரிக்கக் கூடாது.**

# LIFE LINE...

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

## Out Reach Projects - Sri Lanka – Jun'21

### COVID-19 Relief Efforts by distributing Milk Powder to 115 children under the age of 5 at Valathapitty village in Ampara district

The 425 families in Valathapitty were relocated from Ampara in 1990, during the time of conflict. They are under locked down due to covid 19 pandemic with 82 positive cases. Now, there are 115 children below 5 years in the village. The adults in the village are mostly daily earners and due to the lock down, struggling to make ends meet in their day to day life. They are facing huge difficulties in finding food items for children.




The volunteers distribute 1Kg milk powder per child, amidst the difficulties of the lockdown.






Special Projects News
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527

Page 1




Our sincere thanks to Saiva Munnetta Sangam (UK) (Overseas Projects Division) for funding this project. Our special thanks to Mrs P Sabaratnam for the continuous invaluable support for needy causes.



ගැම සංවර්ධන සමිතිය
கிராம அபிவிருத்திச் சங்கம்
RURAL DEVELOPMENT SOCIETY
New Village, New Valathapiddy, Malwatte,Ampara
Regd No : EP/DRD/AM 17/89B/0354

Mr.K.VASANTHAKUMAR President | [illegible] Secretary | Mr.T.MOORTHY Treasurer

2021/06/11

கௌரவ தலைவர்
அறிவொளி வளையம்
லண்டன்

நன்றி தெரிவித்தல்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவு வளத்தாப்பிட்டி – 01 கிராம உத்தியோகத்தர் பிரிவில் எமது கிராமமான புதிய வளத்தாப்பிட்டி கிராமம; Covid – 19 மூன்றாம் அலை ஏற்பட்டு சுமார் 73 Covid – 19 நோயாளர்கள் [illegible] முற்றாக முடக்கப்பட்டது. இந்நிலையில் இக்கிராமத்தில் உணவு மற்றும் சிறுவர்களுக்கான பால்மா பக்கட்டுக்கள் இல்லாமையினால் மிகவும் கஷ்டத்தின் பத்தியில் இருக்கையில் எமது உறவுகளின் வேண்டுகோளிக்கிணங்க லண்டன் அறிவொளி வளையம் நிறுவனத்தினால் 1- 5 வரையான சிறார்களுக்கான 1Kg Ancher பால்மா பக்கட்டுக்கள் 115 கல்முனை லொற்றிக் கழகத்தின் ஊடாக எமக்கு கிடைக்கப்பெற்றது. இவ்வுதவியினை வழங்கிய தங்களுக்கு எமது கிராமத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்
கிராம அபிவிருத்திச் சங்கம்
புதிய வளத்தாப்பிட்டி
PRESIDENT
RURAL DEVELOPMENT SOCIETY
NEW VILLAGE, WALATHAPITIYA
MALWATTHAI AMPARA

செயலாளர்
கிராம அபிவிழுத்திச் சங்கம்
புதிய வளத்தாப்பிட்டி
SECRETARY
RURAL DEVELOPMENT SOCIETY

Ancher 1 Kg - 115 பால்மா பக்கட்டுக்கள் புதிய கிராமம் வளத்தாப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் பொருப்பேற்று முறையாக பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

சமாதான நீதிவான்
VELLI JEYACHANDRAN
Justice of Peace (Whole Island)
No: 231, New Village, Valattapitty
Malwatta - Ampara
Reg No: 20-06-[illegible]-544

கிராம உத்தியோகத்தர்
K. RAVI (JP)

We would like to thank Mr. M Siva, Rotary Club, Kalmunai for coordinating the activities very efficiently within a short period. We are also grateful to Anbaalayam for their immense continuous support.








**Special Projects News**
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527

Page 2

# ANNA DHANAM

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - London – May'21

**A special Anna Dhanam (feeding the hungry) during these difficult times due to Covid-19 in South East London for the month of June'21.**

The Government under emergency measures have temporarily housed all those who have been sleeping rough and are continuously supporting them.



Seva Street was providing 200 meals every Wednesday at Stratford Shopping Centre prior to the lockdown.

Having noticed the significance of such an initiative, Newham Council have approached Seva Street and they provide 235 - 250 meals every day to those who need support.

**Please join us to help make a difference to those who have been affected by homelessness by sponsoring any number of meals; with the help of volunteers, which costs only 50pence per hot meal.**



EC is privileged to support Seva Street by sponsoring hot meals once a month. We have witnessed the service provided by Seva Street and are touched by their commitment,dedication and enthusiasm.



The Team

**Hot nutritious vegetarian meals were sponsored by the Saiva Munnetta Sangam (UK). We are grateful for their thoughtful contribution.**

**Our sincere thanks .**

**We enclose the latest advice from Government on Coronavirus.**

https://www.gov.uk/coronavirus

The number of people permanently living rough on London's streets increased by nearly a quarter in three months and the number of rough sleepers with mental health problems (a particularly vulnerable group) rose almost a third, from 934 to 1,220 people. They need support from us all.




**Nutritious vegetarian meals have been served to those in need in countries such as Sri Lanka, India, Malaysia, Nepal etc. This has only been possible with your support.**

**We have served meals:**
**During 2017 - over 11,875**
**During 2018 - over 12,250**
**During 2019 - over 13,860**
**During 2020 - over 11,500**

Special Projects News
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527

Page 1




**Special Projects News**
**email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527**

**Page 2**

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட நாள்கள்

**ஜூலை (06-07-2021) தொடக்கம் நவம்பர் (05-11-2021) வரை**

| | | |
|---|---|---|
| *06.07.2021* | செவ்வாய் | ஆனிஉத்தரத் திருவிழா ஆரம்பம் |
| *13.07.2021* | செவ்வாய் | மாணிக்கவாசகர் குருபூசை |
| *14.07.2021* | புதன் | தேர் |
| *15.07.2021* | வியாழன் | ஆனித்திருமஞ்சனம் -நடராஜர் அபிஷேகம் |
| *07.08.2021* | சனி | ஆடி அமாவாசை |
| *10.08.2021* | செவ்வாய் | ஆடிப்பூரம் |
| *14.08.2021* | சனி | சுந்தரர் குருபூசை |
| *21.08.2021* | சனி | நடராஜர் அபிஷேகம் |
| *04.09.2021* | சனி | பிரதோஷ விரதம் |
| *18.09.2021* | சனி | பிரதோஷவிரதம் |
| *19.09.2021* | ஞாயிறு | நடராஜர் அபிஷேகம் |
| *07.10.2021* | வியாழன் | நவராத்திரி ஆரம்பம் |
| *15.10.2021* | வெள்ளி | விஜயதசமி |
| *05.11.2021* | வெள்ளி | கந்தசட்டி விரதாரம்பம் |

**பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.**

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

**காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை**
**மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை**

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

***"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"***

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel : 020 8514 4732   Fax: 01268 561805

**www.saivamunnettasangam.com   smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**


## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town<br>Post code | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# திருமுறையின் பெருமையறியும் பேறுபெற்றேன்

## தில்லையூரான்

சைவசித்தாந்தத்தில் முதல்நூல் என்று சான்றோராற் போற்றப்படுகின்ற சிவஞானபோதம் மெய்கண்டதேவர் நாயனாரால் அருளப்பெற்றது. அவரின் வாழ்க்கை வரலாறுபற்றி அறியும்பொழுது முன்பு நான் அறிந்திராத அற்புதமான செய்தி ஒன்று எனக்குக் கிடைத்தது.

மெய்கண்டதேவரின் தந்தை அச்சுதகளப்பாளர் என்பார். அவர் சிவபெருமானிடம் எல்லையற்ற பத்தி கொண்டிருந்தார். அவருக்குக் கல்விச் செல்வம், பொருட்செல்வம் ஆகியன இருந்த பொழுதும் பிள்ளைச் செல்வம் மாத்திரம் கிடைக்கவில்லை. அதுபற்றிக் கவலையடைந்த அவர், தன்னுடைய குலகுருவாகிய சகலாகம பண்டிதர் என்று போற்றப்படும் தவசிரேஷ்டர் அருள்நந்தி சிவாசாரியரிடம் சென்றார். அவரிடம் தன் குறையை விண்ணப்பித்தார். அவர் அச்சுதகளப்பா ளரிடம், திருமுறை ஏடுகளை மலரிட்டு, பூசைசெய்து, வணங்கி அவற்றில் கயிறு சாத்திப் பார்க்கும்படி ஆஞ்ஞாபித்ததார். தன் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டு அச்சுதகளப்பர் அவ்வண்ணம் செய்தார். அப்பொழுது திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருவெண்காட்டுப் பதிகத்தில் இரண்டாவதான,

“பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம் தீவினையே”

என்ற பாசுரம் தோற்றப்பட்டது. அதைக்கண்ட அச்சுதகாப்பாளர் மெய்சிலிர்த்துப் புளகம் எய்தி, சிவபெருமானின் கருணையை நினைந்து ஆனந்தபரவசப்பட்டார்.

பின்பு தம்முடைய மனைவியாரையும் அழைத்துக்கொண்டு திருவெண்காட்டுக்குச் சென்றார். அங்கே நாள்தோறும் சோமகுளம், சூரியகுளம், அக்கினிகுளம் என்ற மூன்று குளங்களிலும் நீராடி, சிவபெருமானையும் இறைவியையும் வழிபட்டு வந்தனர். இவர்களின் மெய்யன்பு கூடிய பிரார்த்தனைக்கு இரங்கிய சிவபெருமான் ஒருநாள் இரவில் அச்சுதகளப்பாளர் தூங்கும்பொழுது அவர் கனவிலே தோன்றி, “அன்பனே! உனக்கு இப்பிறவியிலே மக்கட்பேறு அரிதாயினும் எமக்கு மிகவும் விருப்பமுடையதாயும் மெய்யன்போடு தம்மை ஓதுவார்க்கு எல்லாப் பேறுகளையும் தருவதாயுமுள்ள தேவாரத்த திருப்பதிகத்தையே ஓதி உண்மையாக நம்பிவந்து வழிபடுகின்றாய். ஆதலின் அத்தேவாரங்களை அருளிய ஞானசம்பந்தன் போலவே அத்தேவாரத் திருப்பதிகங்களின் மெய்ப்பொருளை விளக்கி மெய்ந்நெறியாகிய சைவசமயத்தையும் விளக்கி நிறுவவல்ல நற்புதல்வன் ஒருவனை நாம் உனக்குத் தந்தோம்” என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

உடனே அச்சுதகளப்பாளர் விழித்தெழுந்து பெருமகிழ்வுற்று திருவெண்காட்டு இறைவர் தமக்கு அருள்புரிந்ததை நினைந்து வணங்கித் துதித்தார். நிகழ்ந்ததைத் தம் மனைவியாருக்கும் தெரிவித்தார். சிலகாலம் சென்றபின் அவரின் மனைவியார் திருவயிற்றில் சிவபெருமான் திரு வருளால் கருதோற்றப்பெறும் பேறு உளதாயிற்று.

இவ்வாறு சிவபெருமான் அருள்பெற்ற குழந்தை மெய்கண்டதேவர் என்ற தவசிரேஷ்டர் ஆனார். அவர் மூன்று வயதை அடைந்தபோது, கயிலையில் இருந்து வான்வழியாகத் தெற்கு நோக்கிச்

சென்றுகொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் குழந்தையால் ஈர்க்கப்பட்டு இறங்கி வந்தார். வந்தவர், வடமொழியில் இருந்த சிவஞானபோதத்தை அவருக்கு உபதேசித்து “மெய்கண்டான்” என்ற தீட்சாநாமத்தை அளித்து மறைந்தார். இந்த முதல்நூலை வழிநூலாகக் கொண்டு அருணந்தி தேவர் நாயனார் விரிவாக்கம் செய்து சிவஞானசித்தியார் என்ற அருநூலை ஆக்கினார்.

இந்த நற்செய்தியைக் கேள்விப்பட்டதும் திருமுறைகளின் அருமை, பெருமைகளைப்பற்றிச் சிந்திக்கத்தொடங்கினேன். இயன்றமட்டும் பாராயணம் செய்தேன். என் இளமைக் காலத்தில் எங்கள் ஊரில் இருந்த கோயிலில் அடியார்கள் ஏடுகளில் கயிறு சாத்திப் பார்க்கும் வழக்கம் நினைவுக்கு வந்தது. ஆனால், திருமுறைகளைப் பாராயணம் செய்வதில் எனக்குச் சில இடர்ப்பாடுகள் இருந்தன. ஒன்று, திருமுறைகளைப் பண்ணிசையொடு பாராயணம் செய்யவேண்டும். ஆனால் எனக்குச் சங்கீதஞானம் கிஞ்சித்தும் இல்லை. நாங்கள் படித்த கல்லூரியில் சங்கீதம் கற்பிக்கப்படவில்லை. ஆகவே, கேள்வி ஞானமாகவே கேட்டுப் பாட முயன்றேன். எங்கள் கோயிலில் ஓதுவார் அவர்கள் பாடும்போது காதில் விழுவதை அப்படியே கிரகிக்க முயன்றேன். அதையே மனனம் பண்ணிப் பாராயணம் செய்தேன். ஊரிலே இசையறிவு இல்லாதவர்கள் திரையிசைப் பாடல்களைக் கேட்டு அதுபோலப் பாடுவார்கள் அல்லவா! அதே வழியையே நானும் பின்பற்றினேன்.

அடுத்தது, பொருள் விளங்கிப் பாடவேண்டும். “சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்து” என்பது சிவபுராணம். திருமுறைகளில் திருஞானசம்பந்தப் பெருமான் அருளியுள்ள திருப்பாசுரங்களில் பல சொற்களுக்குப் பொருள் விளக்கம் காண்பது கடினம். மற்றையோரின் தேவாரங்களிலும் தமிழ்ப் புலமை குறைந்தவர்களுக்கு பொருள் தெரிந்து கொள்வது சுலபமன்று. எனினும் திருமுறைகள் “எனதுரை தனதுரை”யாக உள்ளதால் அவை களைப் பாராயணம் செய்வது மட்டுமே சிவபெருமானின் அருளைப்பெற ஒரே வழியாகும்; சிறந்த வழியுமாகும் என மனந்துணிந்தேன்.

இப்படியான இந்த நல்ல விஷயங்களைக் கற்க எனக்குத் துணையாக இருந்ததும் இறைவன் திருவருளே! சில ஆண்டுகளுக்குமுன் இலண்டன் சிவன்கோயிலில் உள்ள ஒரு மண்டபத்தில் சைவ சித்தாந்த வகுப்புக்கள் நடைபெற இருப்பதாக அறிந்து மகிழ்ந்தேன். பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணிவரை அந்த வகுப்புக்கள் நடை பெற்றன. Oxford இல் வசித்துவரும் சைவ சித்தாந்த அறிஞரும் தமிழ் ஆராய்ச்சியாளருமான திரு சு யோ பற்றிமாகரன் இந்த வகுப்புக்களை நடத்தினார். இரண்டு ஆண்டுகள் கற்றபின், தமிழ்நாட்டிலுள்ள தருமையாதீனம் வழங்கும் “சித்தாந்தரத்தினம்” என்ற பட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. கற்கைப் பாடநெறியில் சாத்திர நூல்கள் பதினான்கில் முக்கியமானவையான சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்கள் இருந்தன. அவற்றைக் கற்கக் கிடைத்த பேற்றினாலேயே மேலுள்ள கட்டுரையில் எனது கருத்தைத் தெரிவிக்க இயன்றது.

நிறைவாக, எனக்கு மிகவும் பிடித்த ஒரு பாசுரம், திருஞானசம்பந்தர் அருளியது, காலத்தின் தேவையுமாக உள்ளதால் இங்கே தருகிறேன்.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினைநாடா திருப்பதும் உம்தமக்கு ஊனமன்றே
கைவினைசெய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்

**திருச்சிற்றம்பலம்**



# திருக்குறள் கதைகள்
# Thirukural Stories

திருமதி சாவித்திரி ஆனந்தன்

## இறைமாட்சி
## Making of a ruler

***அதிகாரம்: 39*** ***குறள்: 390***

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையனாம் வேந்தர்க் கொளி

பொருள் :
கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

கர்ணன் கொடையாளி என்பதுடன் ஒரு சிறந்த அரசனுக்குரிய பண்புகளையும் கொண்டிருந்தான் என்பதை விளக்கும் சிறு சம்பவங்கள் கீழுழ:
வெய்யில் அதிகமான ஒரு நண்பகல் பொழுது. வீதியில் ஒரு முதியவர் நடந்து கொண்டிருக்கிறார். தொடர்ந்து நடக்க முடியாமல் களைப்பு மேலிட்டு உடல் தளர்ந்த போது, எதிரே வந்து கொண்டிருந்த துரியோதனனைக் கண்டார். அவனிடம் தனக்கு ஏதாவது உணவு தரும்படி கேட்கிறார். நடக்க முடியாமல் இருந்த முதியவரிடம், அருகில் சில தூரத்திலிருந்த உணவு விடுதியைச் சுட்டிக்காட்டி, "அங்கே போய் உணவருந்துங்கள்" என்று சொல்லிப் போய்விட்டான். முதியவருக்கோ தொடர்ந்து ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலை.
சிறிது நேரத்தில் அந்த வழியால் ஒரு ரதம் வருகிறது. முதியவர், சக்தி அனைத்தையும் திரட்டி, தன் நிலைமையை விளக்குகிறார். கீழே இறங்கிய அந்த மனிதன் ரதத்தில் இருந்த சில கனி களையும் கொடுத்து, அலங்காரம் செய்யப்பட்டிருந்த இளநீர்க் குலைகளின் சில இளநீரை எடுத்து அவருக்குப் புகட்டியும் விடுகிறான். களைப்பு நீங்கிய முதியவர், "நீங்கள் கர்ணன் தானே?" என்று அவனிடம் கேட்கிறார். கர்ணன் தலையை அசைத்து, "அருகிலுள்ள உனவு விடுதிக்குப் போய் உணவருந்துங்கள்" என்று கூறி விடை பெறுகிறான்.

மற்றுமொரு சம்பவம்
எல்லோரும் கர்ணனைப் பெரும் வள்ளல் எனக் கொண்டாடுவது ஏன் என்ற சந்தேகம் அருச்சுனனுக்கு இருந்தது. தன்னை விட அவன் அப்படி என்ன உயர்வு என்றும் நினைத்தான். தனது இந்தக் கருத்தைக் கிருஷ்ணனிடம் பகிர்ந்து கொண்டான். அதைக் கேட்ட கிருஷ்ணர் தனக்கே உரிய அந்தப் புன்னகையுடன், "உங்கள் இருவரில் யார் வள்ளல் என்பதை நாளை நிரூபிக்கிறேன்" என்று கூறிப் போய்விட்டார்.
மறு நாள் உதயத்தில், கிருஷ்ணன் தனது சக்தியால் இரண்டு தங்க மலைகளை உருவாக்கினார். அருச்சுனனையும் கர்ணனையும் அழைத்து, ஆளுக்கொரு தங்க மலையைக் கொடுத்து, "இது உங்களுடைய சொத்து. இந்த நாளின் முடிவில் இதை நீங்கள் தானம் செய்திருக்க வேண்டும்."என்ற நிபந்தனை விதித்துப் போய்விட்டார். உடனேயே செயலில் இறங்கிய அருச்சுனன், தங்க மலையை வெட்டி வெட்டி வறியவர்க்கெல்லாம் கொடுத்தான். தானே வெற்றி

பெறுவேன் என்று பெருமையுடன் இருந்தான். அன்றைய நாளும் முடிவுக்கு வந்தது. கிருஷ்ணர் வந்தார். அருச்சுனன், தான் தானம் செய்து விட்ட மலையின் பகுதியைக் காட்டினார். ஆனால், கிருஷ்ணர் கூறிய பதில் அவனைத் திகைக்க வைத்தது.
"கர்ணனே வெற்றி பெற்றான்" என்று அவர் கூறியதன் காரணம் என்ன என்று அருச்சுனன் கேட்டான். தனது வழமையான அதே புன்னகையுடன் கிருஷ்ணர் அவனுக்குப் பதில் சொன்னார். "இன்று ஒரு மனிதன் கர்ணனிடம் யாசித்து வந்தான். கர்ணன் அந்த மலையை அவனிடம் காட்டி, 'இந்த மலையை வைத்துக்கொள்' என்று கூறித் தன் வழியே போய்விட்டான். கர்ணனுடைய தானம் காலையிலேயே முடிந்துவிட்டது."
இப்படிக் கிருஷ்ணர் கூறியதைக் கேட்ட அருச்சுனன், மேலே எதுவும் பேச முடியாமல் நின்றான்.

In addition to be a philanthropist, Maha Bharata Karnan, also had all the relevant qualifications within him to be an ideal King. There are some small incidents to explain this:

On one sunny midday, an old man walking on his way, got very tired and was unable to walk even a single step further. He saw Dhuriyodhana coming opposite to him and asked him to offer any food to eat. Even though Dhuriyodhana noticed the fatigue condition of the old man, he pointed out a restaurant nearby and told, 'You go and have your food there' and went away.
After a while, a Chariot came and the old man explained his situation to the occupant of that Chariot.. On listening to this, the man from the Chariot got down, come near the old man, gave him some fruits from his carriage. Bunches of coconuts were hanging as decorations on the Chariot. The man got coconut water from some of them and fed the old man with the coconut water. The old man then got refreshed and asked the person, 'are you Karnan?' Karnan nodded and told the old man to go to the nearby restaurant and have his meal. He then continued his ride in the Chariot.

Another incident:
Arjunan once had a big doubt as to why all the people celebrate Karnan as the great contributor and how could it be possible for Karnan to be a much better person than himself. He shared this thought with his friend Krishna one day. On listening to this, Krishna with his usual smile told, 'Tomorrow I will show you who the real philanthropist is, of you two' and went away.
In the dawn next day, Krishna by his almighty power, created two gold mountains. He called Arjunan and Karnan, gave them one gold mountain each and said,
'This is your property. Have it on one condition that before today ends you should have finished donating this gold mountain' and went away.
Arjuna hurried and started doing his work immediately. He cut his gold mountain into pieces and continued donating those to the poor people with pride, he thought he would be definitely the winner .
At sunset Krishna came there. Arjunan showed him that he had donated his gold mountain to the poor people. But, he was shocked to hear Krishna saying, 'Karnan is the winner'. He got confused and asked Krishna the reason. Again with his usual Godly smile, Krishna replied;
'Today one person came to Karnan begging. Karnan showed that gold mountain to the beggar and told, 'Take this mountain' and went on his way. Karnan's donation had been finished in the morning itself'.

On hearing this, Arjunan became speechless!

# அறம் சார்ந்த கல்வி


## திரு க.பரமானந்தம்
### பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்


அன்பாய் இருப்பது, இனிமையாயப் பேசுவது, கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது, நல்லதையே நாடுவது, மனதில் குற்றமற்று இருப்பது, பொய்யைத் தவிர்ப்பது, சினத்தைத் தவிர்ப்பது, பொறாமை உணர்ச்சியைத் தவிர்ப்பது, பிறர்க்கு கெடுதல் செய்யாதிருப்பது, பிறருடன் பகிர்ந்து உண்பது, பிற உயிர்களைக் கொல்லாதிருப்பது, தீமை இல்லாத வழியில் பொருளீட்டுவது, இல்லற வாழ்வில் ஈடுபடுவது, அறநூல்களைக் கற்று அடக்கமுடன் இருப்பது, தூய துற வியரைப் பேணுவது, மானத்துடன் வாழ்வது, உயிருக்கு ஊக்கம் தருவது, அருள் வழியில் ஆண்டவனை உணர்த்துவது போன்றன அறம் ஆகும்.

கல்வியின் மூலம் சிறந்த பிரஜைகளை உருவாக்க முடியும். மக்களால் நாடு வளம் பெறும். நாடு வளம் பெறும்போது முழு உலகமுமே வளரச்சியடையும். கல்வியினூடாக ஒருவன் சிறந்த உளப்பயிற்சி பெறுதல் வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, ஈகை, இன்சொல், தியாகம் ஆகிய பண்புகளைக் கற்பதுடன் அதற்கேற்ற வகையில் வாழ்ந்து காட்டுதல் வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் அறவழியில் நின்று ஒழுக்கத்தையும், ஒப்புரவையும் பெறுவதற்குக் கல்வி துணைபுரிய வேண்டும். அறமே மனித வாழ்வின் அடிநாதம். அறமில்லாத வாழ்வு உயிரில்லாத உடல் போன்றது. அறவாழ்வின் அவசியம் பற்றி ஔவையார், திருவள்ளுவர் முதல் வளர்ந்து வரும் கல்விச் சிந்தனையாளர் வரை வலியுறுத்தியுள்ளனர். இதனால்தான் தமிழ் மூதாட்டி ஔவையார் “அறஞ் செய விரும்பு” என்றார்.

> “அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்றது அறம்”

என்றார் பொய்யாமொழிப் புலவர்.

வெள்ளையர் நம்மை அடிமைப்படுத்தத் தீட்டிய சூழ்ச்சியின் முதற் செயல் வடிவம் நமது பண்டைய கல்வி முறைய மாற்றித் தமது கல்வி முறையைப் புகுத்தியதுதான். ஒரு இனத்தின் பாரம்பரிய கல்வி முறையை அழித்துத் தமது கல்வி முறையை புகுத்தினால், அறிவினம் அழிந்து வருங்காலச் சந்ததிகள் தமது கலாசாரத்தைப் பின்பற்றுவார்கள் என்று அவர்கள் நம்பினார்ககள். தமது மண்ணைத்தவிர உலகில் மற்றைய நாடுகளில் ஆதிக்க வெற்றியும் கண்டார்கள். ஆனால் நமது தமிழ் இனத்திடம் அவர்களால் வெற்றியடைய முடியவில்லை. காரணம் தமிழரின் அறம். திரைப்படம், இணையம் அனைத்துமே ஒழுக்கத்திற்கு மாறான உணர்வுகளை அதிகரிக்கவே செய்கின்றன. இதன் உச்சக்கட்டமே இன்று தகாத உறவுக்காகத் தன் இரு குழந்தைகளை ஒரு தாய் கொலை செய்ததும், தன் காதலுக்கு தடையாக இருந்த தாயை மகள் கொலை செய்ததுமான சம்பவங்களாகும். இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகளுக்கு எவ்வாறு நாம் முற்றுப்புள்ளி வைக்கப் போகின்றோம் என்ற கேள்வில் எம்மில் எழுகின்றது.

வேறு எந்தக் கலாசாரத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு நம் தமிழ்க் கலாசாரத்திற் உண்டு என்றால் அது விருந்தோம்பல் ஆகும். வள்ளுவர் விருந்தோம்பலை இல்லத்தின் ஒரு முக்கிய அறமாகப் பதிவு செய்தார். மக்கள் பசியுடன் வாழும் ஜீவராசிகளுக்கும் உணவளிப்பதை அறமாக

கடைப்பிடித்தனர். ஆனால் நாம் இன்று பெற்றோர்க்கும், உற்றார்க்கும் உணவளிப்பதையும் உதவி செய்வதையும் பாரமாகக் கருதத் தொடங்கி விட்டோம். பண்டைய கல்விமுறை குழந்தை களிடமிருந்து அறம், ஒழுக்கம், அன்பு, ஈகை, பெற்றோரையும் பெரியோரையும் பேணிக்காத்தல், வீடு, சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுதல் ஆகிய நற்பண்புகளை வெளிக் கொணர்ந்தது.

இன்றைய நமது தமிழ்ச் சமுதாயம் பண்டைய கல்வி முறையிலிருந்து வெகு தொலைவு விலகிச் சென்று விட்டது. இன்றைய கல்வி முறை பொருளீட்டுவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளது. “பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்னும் கூற்று முற்றும் உண்மை. ஆனால் பொருள் ஈட்டல் மட்டுமே வாழ்வின் உண்மையான வெற்றி அல்ல. பொருளால் பெறமுடியாத உண்மையான அன்பு, மன அமைதி, நிம்மதியை அடைவதே வாழ்வின் வெற்றி ஆகும். அறவழியில் அல்லாது வாழ்வில் மனநிம்மதியையும், மகிழ்ச்சியையும் யாராலும் பெறமுடியாது. இப்பேருண்மையைப் புகட்டவே அறத்தையும் ஒழுக்கத்தையும் முதற்பாடமாகப் போதித்தனர். திருக்குறளில் அதிகாரங்களை வரிசைப்படுத்தும்போது அறன் வலியுறுத்தலை நான்காம் அதிகாரத்திலும் கல்வியை நாற்பதாவது அதிகாரத்திலும் வைத்ததன் நோக்கம் கல்விக்கு முன் ஒருவன் அறத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தவே. அறம் இல்லாத கல்வி ஒருவனுக்கும் அவன் சார்ந்த சமுகத்திற்கும் தீங்கே விளைவிக்கும். அறவழியே வெற்றியின் வழி என்று குழந்தைகளின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தது கல்வி.

கல்வியின் பயனைக் குறிப்பிடும்போது கல்வி அறிவாகவும், அறிவு ஒழுக்கமாகவும், ஒழுக்கம் அன்பாகவும் வளரவேண்டும் என்றே வலியுறுத்தினர். தற்போதைய கல்விமுறை மாணவர்களிடம் அறிவையும் ஒழுக்கத்தையும் அன்பையும் வெளிக்கொணர்கிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. முதியோர் இல்லம், ஆணவக் கொலைகள், ஊழல், சமுதாயத்தில் உள்ள அனைத்து சுயநலப்போக்கு ஆகியவற்றுக்குக் காரணம் நமது சமுதாயத்தில் நிலவும் ஒழுக்கம், அன்பின் குறைபாடேயாகும். நாம் நமது பண்டைய கல்விமுறையை மறந்து, மறந்ததின் விளைவையும் இன்று நாம் அனுபவித்துக் கொண்டேயிருக்கின்றோம். ஆற்றல் மிக்க இளைய தலைமுறையை உருவாக்க வேண்டுமென்றால் நம் குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்துதல் வேண்டும். சிறு வயதில் அரிச்சந்திரனைக் கற்று உணர்ந்ததால்தான் நமக்கு ஒரு மகாத்மா காந்தி கிடைத்தார் அறம், ஒழுக்கத்தின் வழி நின்று வாழ்தலே அவர்கள் வாழ்வின் மிக உறுதியான அஸ்திவாரம், அவற்றின் முதற்படி பின்னாளில் எத்தகைய புயலிலிருந்தும் காக்கும் தடுப்பு அரண். ஓர் அன்பான ஆற்றலுடைய இளைய தமிழ்ச் சமுதாயம் அமைய அறம் சார்ந்த கல்வியைப் போதிப்போம்.

இதன் முடிவினை நோக்கின் அறம் சார்ந்த கல்வி மிகவும் அவசியமானதாகும். ஆசிரியர்களின் சிந்தனைகளும், உரிமைகளும், கைகளும் எப்பொழுது கட்டப்பட்டதோ அன்றே கல்வியில் அறமும் தரமும் இல்லாததொன்றாகிவிட்டது. இந்நிலைமையானது மேலும் தொடராதிருந்தால் குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக அமையும் என்பதில் ஐயமில்லை.

***குறள்:***

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து *398*

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை *400*

# கோண்டாவில் கந்தையா சுவாமிகள் (குடைச் சுவாமிகள்)

## திரு க செல்வரத்தினம்

வரலாற்று மாண்பு மிக்க ஈழத்தின் வட கோடியில் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. இது ஒரு ஞானத் தாமரை பூத்த தடாகம். கைலாய ஞானபரம்பரை போன்று ஈழத்திலும் ஒரு பரம்பரை தொடர்ந்து வந்துள்ளது. கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பலவாண சுவாமிகள், சின்னச் சுவாமிகள், பொன்னப்பா சுவாமிகள், பழக் கடைச்சுவாமிகள், யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், கனகரத்தினம் சுவாமிகள், மகாதேவசுவாமிகள், முத்துக்குமாரசுவாமிகள், சரவணமுத்துச் சுவாமிகள், சடைவரத சுவாமிகள், நாகலிங்கப்பரதேசி, சடையம்மா சுவாமிகள், செல்லாச்சி அம்மையார், சின்னத்தம்பிச் சுவாமிகள் போன்றோர் ஞான பரம்பரையின் சொத்தாகும்.

கணபதி தாய் தந்தையரை வலம் வந்து மாங்கனி பெற்றார். அதனால் அவரை மாம்பழச்சுவாமி என்று வாழ்த்துகிறோம். முருகப்பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்து தகப்பன் சுவாமியானார். வள்ளிமலையில் வாழ்ந்தவர் வள்ளிமலைச்சாமி ஞானகுரு எனப்படுவார்.

யாழ்ப்பாணத்தைப் பட்டணம் என்று சொல்வது ஒரு வழக்கம். பெரியகடைக்கும் பட்டணத்துக்கும். நெருங்கிய தொடர்பு உண்டு. பழக்கடைப்பக்கம் இருந்த ஆறுமுக சுவாமிகள் பழக்கடைச் சாமியெனக் குறிப்பிடப்பட்டார்.

கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகியோர் குடையுடன் உலாவினார்கள். அதே போன்று கந்தையா சுவாமிகளும் குடையுடன் உலாவினார். எனினும் இவரையே கோண்டாவில் சுவாமி என்றும், குடைச்சுவாமி என்றும் அன்பர்கள் அழைத்தார்கள் அத்துடன் கூனல் நிலையில் ஒதுங்கி, ஒதுங்கி, ஓட்டமும் நடையுமாயச் செல்லும் இவர் எப்பொழுதும் குடையுடன் தென்படுவார்

இவர் விபூதியோ, உருத்திராக்கமோ, தண்டோ, கமண்டலமோ இன்றி, குடையோடு கோண்டாவில் சந்தியில் இருந்து நாலா பக்கமும் நெடுஞ்சாலைகளிலும் குறுந் தெருக்களிலும் திரிவதைக் காணலாம். நயினாதீவில் இருந்து செல்வச்சந்நிதி ஈறாக, ஆனைக் கோட்டையில் இருந்து கிளிநொச்சி வரை வீதியோரத்திலே இவரைக் காணலாம்.

**குடையின் முக்கியத்துவம்:**

புலவர்களால் போற்றப்படும் தசாங்கங்களிற் குடையுமொன்று.

> “படையுங் குடையும் கொடியும் முரசும்
> நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
> தாரும் முடியும் நேர்வன பிறவுந்
> தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய” என்பது தொல்காப்பியம்

இறைவனை, “தசாங்கமெனப் பெற்றானே” என்கிறார் குமரகுருபரர்.

இளங்கோவடிகள் சோழனின் குடைச் சிறப்பை பின்வருமாறு போற்றுமுகமாக:

“திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார் சென்னிகுளிர் வெண்குடைபோன்று இவ்
அம்கண் உலகு அளித்தலான்” என்று பாடுகிறார்.

அந்த மாலையினை உடைய சோழனின் வெண்கொற்றக் குடை போன்று உலகிற் தண்ணொளி பரப்பும் திங்களைப் போற்றுவோம் என்பது இதன் பொருள். கந்தையா சுவாமிகளின் குடை பிரபஞ்ச மென்னும் வெம்மையினின்று பக்தி வைராக்கியத்துடன் காத்து நிற்கும்.

கண்ணபிரான் ஆதிசேடனையே குடையாகக் கொண்டுள்ளான்.

சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்(கு) அரவு - பொய்கையாழ்வார்

இறைவனது அருட் குடைக்கீழ் நாம் இருந்தால் எவ்வித குறையும் இல்லை என்பது தத்துவம். குடைச்சாமியின் குடையால் அடிபட்டவர்கள் இரட்சிக்கப் பட்டனர். தமது குடையைக் கொடுத்து சுவாமிகளின் பழைய குடையை வாங்கப் பலர் தவங்கிடந்தனர். குடை பெற்றுப் பலர் பதவி உயர்வு பெற்றனர். சிலர் சம்பாத்தியம் பெற்றனர். சுவாமி தம் வீட்டுக்கு வரமாட்டாரா, தமது வீதி வழியாகச் செல்வாரா எனப் பலர் காத்தும் இருந்தனர்.

வெண்ணிற ஆடையுடன் இருப்பார். சில வேளைகளில் அழுக்குடையுடனும் திரிவார். தோளில் துண்டை மடித்துப் போடுவார். விரைந்து கூனிக் குறுகி நடப்பார். ஓடுவார்; தாமதிப்பார். சில வேளைகளில் குடையினாலும் சால்வையினாலும் தம்மை மறைத்துக் கொண்டும் நடப்பார். காங்கேசந்துறை சோதிசுவாமிகளை இவர் குடைபிடித்து அழைத்துச் சென்றதை அன்று பலர் கண்டனர். ஞானப்பார்வை, மோன நடை, சீல உடை எல்லார் உள்ளங்களிலும் கரந்து நிற்கும். அவரது தோற்றம் நம்மை இறைவனுக்கே வழிப் படுத்துகிறது. அவரது தரிசனத்தைக் காணப்பலர் ஆசையோடு ஏங்கியதில் அதிசயமில்லை.

மருதனாமடத்தில நின்றவர் கோண்டாவிலிற் தென்படுவார். சுன்னாகத்தில நின்றவர் சந்நிதி செல்லும் வல்லையில் சென்று கொண்டிருப்பார். பேயர் போலவும், பித்தர் போலவும், குழந்தை போலவும், ஞானி போலவும் காட்சி கொடுக்கும் இவர் சித்தர் போலவும், சீவன்முத்தராயும் திகழ்ந்தார்.

அம்பலவாண சுவாமிகள் பிறந்த மண்ணும் கோண்டாவில் என்பது குறிப்பிடத்தக்கது.

குருவினால் சீடனும், சீடனால் குருவும் கீர்த்தி அடைந்திருக்கிறார்கள். பரமஹம்ஸரும் விவேகானந்தரும் இதற்கு உதாரணமானவர்கள். கடையிற் சுவாமி வழிவந்த செல்லப்பா சுவாமிகளும் யோகர்சுவாமிகளும் போல, மகாதேவ சுவாமிகளும் கந்தையா சுவாமிகளும் (குடைச் சுவாமி) குருவின் மகிமையைக் காட்டி நின்றனர்.

நல்ல மனிதர் ஆயிரத்தில் ஒருவர். சிறந்த இல்லறம் கண்டவர்கள் இலட்சத்தில் ஒருவர். இல்லறத்தைத் துறந்தவர்கள் கோடியில் ஒருவர். மனதைத் துறந்தவர்கள் சத கோடியில் ஒருவரே.

சுவாமிகளும் அப்படிப் பட்டவர்.

அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்
துறந்தான் அவனின் சதகோடி உள்ளத் துறவு உடையோன்
மறம்தான் அறக்கற்று அறிவோடு இருந்துஇரு வாதனைஅற்று
இருந்தான் பெருமையை என்சொல்லு வேன்?கச்சி ஏகம்பனே. - பட்டினத்தார்

சொர்க்கமும் அதன் திரவியங்களும் மாயையென உணரந்தோர் அவைகளை வெறுத்து, சிவபெருமான் திருவடிகளில் வைப்பர். பசித்தால் புசிப்பார்; நித்திரை வந்தால் உறங்குவர். அது போல மனத்தால் உத்தமராகி, மதியால் வித்தகராகி, பூரணம் நிறைந்தவர் சுவாமிகள். பார்த்தால் உலகத்தவரைப் போல் வாழ்ந்தாலும் பந்த நிவர்த்தி பெற்றவர்களாகவே திகழ்வர்; பற்றற்றவர்.

மாத்தான வத்தையையும் மாயாபுரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கு ஒரு நிட்டை உண்டோ நித்தன் அன்பு கொண்டு
வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து விழி துயின்று
பார்த்தால் உலகத்தவர் போல்இருப்பர் பற்று அற்றவரே - - பட்டினத்தார்

குடைச் சுவாமிகள் விளம்பி வருடம் ஐப்பசி மாத மிருகசீரிட நட்சத்திரத்தில், 1897ல் கோண்டாவில் குமர கோட்டத்தில் அவதரித்தார். குமரகோட்டம் என்ற பெயர் ஆறு படைவீடுகளை நினைவூட்டுகிறது. இவருக்கு இரு சகோதரிகள், ஒருவர் இராசம்மா. மற்றவர் அன்னப் பிள்ளை. கார்த்திகேசு என்பவர் இளைய சகோதரர். கோண்டாவில் சைவப் பள்ளியில் ஆரம்பக்கல்வி பயின்றார். வாலிப வயதில் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு உடையவராகத் திகழந்தார். முப்பது வயதுவரை கந்தசுவாமிகோயில் அண்மையில் உள்ள நாகலிங்கம் கட்டிய மடத்தில் வாழ்ந்தார். சுத்த சைவ உணவையே உட்கொண்டார். மகாதேவ சுவாமிகளைக் குருவாகக் கொண்டு ஆன்மிக அறிவைப்பெற்றார். இவர் இணுவில் வடிவேல் சுவாமிகளுடன் ஒன்றாகப் படித்தவர். வடிவேற் சுவாமி இவரைச் சுவாமி என்றே அழைப்பார். சுதுமலை வைத்தியர் பசுபதி இவருடைய உற்ற நண்பர்.

இவர் கணபதியார் முத்துக்குட்டியை விரும்பித் திருமணஞ் செய்தார். இவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பிறந்து ஒரு கிழமையில் தாயும் இரண்டு கிழமையில் சேயும் இறந்தனர். ஏற்கனவே ஓடும் புளியம்பழமும் போல வாழ்ந்த சுவாமிகள் துறவியானார். நயினாதீவு முத்துக் குமார சுவாமி அவர்கள் வடிவேற் சுவாமிகளை அடிக்கடி சந்திப்பது வழக்கம். யோக சுவாமி களின் கட்டளைப்படி வடிவேற் சுவாமிகள் உருத்திரபுரத்தில் ஸ்ரீமகாதேவ ஆசிரமம் அமைத்துத் தொண்டு செய்யச் சென்று விட்டார். ஒருநாள் வடிவேற் சுவாமிகளைக் குடைச்சுவாமியார் ஞான உணர்வினால் சந்தித்த பின் திடீரெனக் குமரக் கோட்டம் திரும்பினார்

தேடிச் சென்று அன்பர்களுக்கு அருள் வாக்கு அறிந்து கொடுப்பவர். சமாதி அடைய முன் திருவாசகத்தில் சென்னிப் பத்தையும் நந்தன் கீர்த்தனையையும் பாடிக் கொண்டிருந்தார். திருவாசகத்தை படியுங்கள் என்று உறுத்தி, உறுத்திச் சொன்னார். அவர் சென்ற காலத்தைச் சிந்தித்ததில்லை; வருங்காலம் பற்றி நினைத்ததும் இல்லை. அவரது இறுதிக் காலங்களில் பற்றைகளில் துயின்றார்கள். அருள்பார், அருள்பார், அருள்பார் என்பது அன்னாரின் மகா மந்திரம். சமுதாயத்தின் மத்தியில் மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ - திருவாசகம்

அன்பர்களின் துன்பங்களையும் நோய் நொடிகளையும் தீர்க்க இறைவனிடம் மானசீகமாகக் குறை இரந்து சுக வாழ்வு பெற்றுக் கொடுத்தார். நோயாளர்களைத் தானே உணர்ந்து மருந்துகள் சொல்வார். எம் மத்தியில் இப்படியாக இலை மறை காய் போல மகான்கள் உலாவுகிறாரகள். சிறியவர்கள், மாணவர்கள், புத்திக் கூர்மையுளளவர்கள் அவர்களை நல்வழிப்பத்தி ஆன்மிகத் தொண்டு செய்யத் தூண்டுவது பெரியோரின் பொறுப்பாகும்.

சுவாமியார் சமாதியடையச் சில ஆண்டுகளுக்கு முன், கிருட்டிணபிள்ளை என்னும் அன்பர் கோண்டாவில் சந்தியில் சமாதி வைக்கக் கனவு கண்டார். அக்கனவு நனவாகி சுவாமிகளின் சமாதி குறிப்பிட்ட இடத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

விறகின் மேலும் வைக்கோலின் மேலும் புல்லின் மேலும் மண்கட்டிகளின் மேலும் துயின்றார்கள். இறுதி ஐந்து ஆறு வருடங்களாக ஒரு பற்றை நடுவில் துயின்றார்கள். அவர் காட்டிய அருள் வழியே நமக்கு ஈடேறும் இலட்சியமாகும். தமது கால எல்லை வரை காயத்தைச் சுமந்து ஆன்மிக ஒளியை வீசி உடல் விட்டுப் பரமபத வாழ்வு பெற்றவர் ஞானிகள். இப்படி ஞானிகள் வாழ்ந்து போவதால் உலகம் சிறப்படைகின்றது.

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே - திருமந்திரம்

பிங்கள ஆண்டு மாசிமாதம் 2ஆந் திகதி, செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்திலன்று சுவாமிகள் மகாசமாதி கூடினார்கள் (14-02 - 1978) ஓம் சாந்தி



சுவாமிகளின் மகா வாக்கியங்கள்:

எம்பெருமான் உணர்த்துவார்
எம்பெருமான் நடாத்துவார்
எம்பெருமான் காட்டுவார்
எம்பெருமானைக் கேட்க வேணும்
அருள்வான் அருள் வாக்கு
அறிவான் அருள் வாக்கு
அருள் பார் அருளொளிபார்
அருள்பார் பாஞ்ச சன்யம்

# வாரியார் படைத்த விருந்து

## சோ.ப



வாரியார் சுவாமிகள் என
பின்னாளில் தமிழுலகம் கொண்டாடிய நாவலர்
வெறுமனே கிருபானந்தவாரி
என அறியப்பட்ட காலம்
எனக்குப் பதினைந்து வயது
யாழ்ப்பாணத்தில் அவர் நிகழ்த்திய
தொடர் சொற்பொழிவுகளைத்
தவறாது கேட்டுவந்த காலம்

கோயில் வீதிகளில் பிரசங்கம் கேட்க
ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என
ஆயிரக்கணக்கில் திரளும் அடியார் கூட்டம்
கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பாக
சந்தன மேனியோடு
முருகனே மின்னொளியில் நிற்பதுபோல
வாரியாரின் நெடிய உருவம்
இசை வெள்ளத்தில் மிதக்கும் மக்கள் வெள்ளம்
எல்லோர்க்கும் எல்லாம் புரியும் என்பதில்லை
அவரவர் தகுதிக்கேற்ப பொறுக்கிக் கொள்ளலாம்

அப்படித்தான் அன்றைக்கும்
இராமன் முடிதுறந்து காடேகும் கட்டம்
“சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரிவிற்கை இளையவன் முன்செல
காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்வூர்”

வாரியார் காட்சிப்படுத்துகிறார்
சொக்கிப் போய்க்கிடக்கிறது சபை
இராமன் காடுபோவது கண்டு
யார் தான் அழவில்லை?
“ஆவும் அழுதது அதன்கன்(று) அழுதது
அன்றலர்ந்த பூவும் அழுதது
புனற்புள் அழுதது..”
சோகரசத்தை முகாரி பிழிகிறது
குறிப்பெடுத்துக் கொள்கிறேன் நான்
மறுநாள் மாமாவின் சுருட்டுக் கொட்டிலில்
தவறாது பிரசங்கம் கேட்டுவரும்
தொழிலாளருடைய விமர்சன அரங்கு

அந்த வழியே வருகிறா பெரியாச்சி
அவவும் பிரசங்கத்தைத் தவறவிடுவதில்லை
ஆனால், என்ன கொள்ளையோ
வாரியார் தொடங்கிய அரை மணிநேரத்தில்
கோயில் தூணில் சாய்ந்து குறட்டைவிடத் தொடங்குவா
அன்றைய அரங்கின் மையப்புள்ளி அவதான்
"விசாலம்! எப்பிடி நேற்றுப் பிரசங்கம்?"
தொடக்கி வைத்தார் பெரியப்பு!

"எட, இந்த மனுஷன் சமையல் பாகம் எல்லாம்
என்னெண்டு பழகிச்சுதோ நானறியன்!
தக்காளி ரஸம் வைக்கிற முறை அந்தாள்
சொல்லேக்கை வாயூறுமெடி!"

ஆக, நான் அன்றலர்ந்த பூவும் அழுதது
என்ற கற்பனையை ஏந்திவந்திருந்தேன்
பெரியாச்சியோ தக்காளி ரஸத்தோடு வந்திருக்கிறா!
ஓம், வாரியாரிடமிருந்து
ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்ப
ஏதோ ஒன்றைப் பெற்றிருக்கிறார்கள்!

## Trust, Believe and Surrender.

A person started to walk on a rope tied between two tall towers. He was walking slowly, balancing a long stick in his hands. He had his son sitting on his shoulders.

Everyone on the ground were watching him in bated breath and were vey tensed. When he slowly reached the second tower, everyone clapped, whistled, and welcomed him. They shook hands and took selfies.

He asked the crowd, " Do you all think that I can walk back on the same rope now from this side to the other side?"

The crowd shouted in one voice, "Yes!, Yes!, you can!"
"Do you trust me?" he asked. They said, "Yes, yes, yes, we are ready to bet on you."

He asked, "Okay, can anyone of you give your child to sit on my shoulder? I wil walk and take your child safely to the other side?"
There was a stunned silence. Everyone became quiet.

Belief is different. Trust is different. For trust, you need to surender totally
This is what we lack towards God in today's world

**We believe in almighty but we do not trust him.**

# THE POWER OF MANTRAS
## - a scientific view -

by Dr. Shan Ranjit

**WHAT ARE MANTRAS?**

What is a Mantra? A Mantra can be described as a 'sound symbol' that has the power to effect a beneficial transformation. In Mantra, 'Ma' means ‘manana’ and 'Thra' means saving. It means that which saves the man caught up in the coils of this worldly life which is infested with death, grief and pain.

The vibrations that emanate from the mantras have energy that draws the divine closer to the devotee. The vibrations from the mantras have the power to redress and cure all our ills. However, when the mantras are said they should deeply arise and come from our hearts, not merely from our lips. Today, the atmosphere is polluted by bad thoughts. When these mantras are said, the vibrations enter the atmosphere and purify the bad thoughts in the mind. Mantras should be uttered in utter humility to the divine.


The effect of these sound symbols (mantras) has the potency to change the nature of mind and matter. However, the pronunciation is very important. (This is why it is better that these age-old Mantras are recited in their original language. It will be difficult to translate the correct meaning of the Mantras when it is done in other languages - however good the translator may be). Fire can be used for cooking; however, it can also be used to burn down a house. Likewise, Mantras can bring a positive beneficial result or a meltdown when it is misused or practiced without some guidance.

"Speech is the essence of humanity", declare the Vedas. All of what we think and become is determined by the expression of an action through the speech. All our ideas take form only through speech. Even in the Bible (Gospel of John), states "In the beginning was the Word. And the word was with God and the Word was God." Saying a word actually produces physical vibration. If this is combined with mental intent, the results are stunning and amazing.

**SIX ASPECTS OF MANTRAS:**

Each Mantra has six aspects. They are:

1) A Seer (Rishi) - All mantras have always come down from a master (seer) to disciple. For example, the sage who passed on the famous and powerful Gayathri Mantra is Vishwamitra.



Vishwamitra

2) Raga - Specific sound or melody.



3) A Presiding Deity (Devata) - Each Mantra is devoted to a Deity. It is important to understand that what we call as deities (gods) are nothing but "consciousness" at different levels of energy (shakthi). It is the humans who have given a name and a form for such 'energised consciousness'. Each Mantra vibrates at a certain frequency, and this is connected to a particular Deity, which has a similar vibration. The Divinity (consciousness) awakes only if the vibrations generated by the chanting matches with its basic frequency.

4) A Seed sound (Bija) - Within each Mantra is a seed, which is its source of potency. You do not see the tree inside a seed. However, with the proper care, the tree will germinate. Likewise, with proper pronunciation and constant recitation (also called Japa), the potency of the Mantra will be revealed.




5) Pillar or Pin (Kilaka) – This plugs the power that is hidden in the Mantra. As soon as the plug is removed by constant and prolonged repetition of the Name, the power that is hidden is revealed.

6) Power (Shakthi) - This is the power that is held within the Mantra. By chanting the Mantra, constant vibrations are produced. These vibrations are nothing but a form of energy. By reciting different Mantras that have different tones and vibrations, we create different energy levels and patterns.

**WHAT ARE SOUND AND VIBRATION?**

A word is a sound and the sound is a vibration. Such vibrations are series of rotating waves, which can be measured by the 'length' of the wave, or by the 'frequency' at which it vibrates per second. It should be noted here that the different vibrations are not intrinsically different from each other; they only differ in their rapidity. In all these there is no difference in substance. They are all merely vibrating energy.

Vibration is a form of energy. Everything in the universe is Energy (Shakthi). All the creation in this world is made up atoms. Atoms are nothing but subtle energy fields. So, this entire world is one flood of electromagnetic flow. Where there is sound there is vibration.



To produce a sound the vibration corresponding to it must be also created. Different vibrations of the same energy are the cause of creation. Likewise, it is believed that the world was created with the breath of the Supreme consciousness (call it Brahman or Paramatman), manifesting itself as the sound of Vedas.


Very little disturbance of equilibrium produces vibration, however minute. So, it should be understandable that when the elements originated and the creation started, the vibration symbolised by the sound of OM (pranava) was produced. It is the Primordial sound.



Similarly, the solid matter has its own individual frequencies as well and is affected when its own particular vibration is sounded. Basic energy is light and sound. Sound energizes and harmonises all life. That is why 'sound' has been used in medical treatment. 'Ultra Sound' that is very commonly use in medical filed today is nothing but sound. It has been scientifically proven that sound can reduce stress, enhance immune system, slow down the brain wave activity and increase endorphins levels.

## SOUND AND ENERGY

Ultrasound is frequently used both diagnostically and therapeutically in medical field. In ultrasound machines, when the transducer - the small head made of Silica - is placed on the body, it sends sound waves (these are above the hearing range of human ears). These sound waves then hit the intended organ (say the Gall bladder or the Kidneys) and bounce back and hit the transducer. When these sound waves hit the transducer, that sound energy is converted to light energy and the whole organ is seen on the screen of the ultrasound machine. Likewise, in physical therapy treatments, this sound energy is converted into heat, and promote the healing process of a damaged tissue.





Scientists now believe that sub-atomic particles have energy waves. Each particle has its own sound and vibrations, producing dense and subtle forms. Modern scientists have detected and measured micro sounds coming from the universe. Yet, they are at a loss to point out the source. Ancient scriptures say 'creation of matter' originated from sound.

## HOW DO THE MANTRAS AFFECT YOUR BODY?

Repeating a Mantra creates different energy levels that is beneficial at the physical, mental and spiritual levels. Human beings have three bodies with five sheath (Koshas):

a) Gross or solid body (Sthula Sarira) - This is composed of the food sheath (Annamaya Kosha)

b) Subtle body (Sukshma Sarira) - This is composed of Vital air or energy (Pranamaya kosha),
Mind (Manonmaya kosha) and Intellect (Vignanmaya kosha)




c) Causal body (Kaarana Sarira) – This is composed of the Bliss sheath (Anandamaya kosha) which hold the 'Jiva' (soul).

Chanting the Mantras affects your subtle body. Since the subtle body is made up of small vibrations (energy), chanting directly affects the energy vibrations of the subtle body. Mantras start a powerful vibration which correspond to both a specific spiritual energy frequency and a state of consciousness in a seed form. Over a period of time, the mantra vibrations override all other vibrations, which are eventually absorbed by the Mantra. After a length of time, the Mantra produces a state where the organism vibrates at the rate completely in tune with the energy and spiritual state represented by and contained within the Mantra.

(to be continued...)

கந்தரந்தாதி பாடல்:- **(46ஆம் பக்கத்தொடர்ச்சி)**

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் தெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமிழா நித்தர் சேவித்து நின்ற தென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச்செல்வி தினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வேளிருப்பச் செவிகுனித்தே

என்று அருணகிரிநாதர் பாடி அன்னையாகிய மகாசக்தியை மகழ்வித்தார்.

சக்தி விரதங்கள்:-

ஆடிப்பூரம், மாசி மகம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை கொண்டாடப்படும் மகாமகம்(கும்பமேளா), பங்குனி உத்தரம், தைப்பூசம், வைகாசி விசாகம், ஆடி அமாவாசை வெள்ளிக்கிழமை (உமா சுக்ரவாரம்), சாவித்திரி விரதம், சுவர்ணகௌரி விரதம், காரடையா நோன்பு, வரலெட்சுமி விரதம், கௌரி விரதம், நவராத்திரி விழா(தசாரா) ஆகிய விரதங்களை மக்களாகி நாம் அனுட்டித்து சிவனையும்-சக்தியையும் மகிழ்வித்து நாமும் மகிழ்ந்து ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் பிரார்த்தித்து மகிழ்வித்து சிவக்தியின் பாதாரவிந்தங்களை இடைவிடாது தியானித்து நிலையான முக்திப் பேற்றை அடைவோமாக!

# சக்தி வழிபாடும் - ஆடிப்பூரமும்

ஸ்ரீமதி தனலட்சுமி மகாதேவன்
(அறநெறிப் பொறுப்பாசிரியர்)

**சக்தி வழிபாட்டின் தொன்மை:**

இந்து மதத்தின் சக்தி வழிபாடு மிகப் பழமையான காலம் தொட்டே நடைபெற்று வருகின்றது. இவ் வழிபாடு பூமியைப் பெண்ணாகக் காணும் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. இக்காரணத்தால் என்றும் இந்து மக்கள் உள்ளங்களில் நீங்காது இடம்பெற்றிருக்கின்றது.

சுக்தி வழிபாடு என்ற கருத்து மக்களிடையே நிலையூன்றி இருக்கிறது. இக்கருத்தை ஆதரிக்கு முகமாக இருக்கு வேதம் துணை நின்றது. சக்தியை இயக்கு சக்தி என்றும் இயங்கு சக்தி என்றும் என இருவபைப்படுத்தி, இயங்கு சக்தி இயக்குசக்தியுமாகியுள்ள தெய்வம் சூரியன். சூரியனுக்குரிய மந்திரம் சாவித்திரி மந்திரம், காயத்ரி மந்திரம் என்பன.

ஸ்ரீ காயத்ரி மந்திரத்தின் பொருள்:

ஓ! மாதா! முக்காலமும், மூவுலகம் முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே! எனது புத்தியை கூர்மை அடையச் செய்து, சூரியப்பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல், எனது அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சார்ந்த சித்த நிர்மலமானதாக பிரகாசிக்கச் செய்யும்படி யான் உம்மைத் துதிக்கின்றேன். வேத சாரமான இந்த மந்திரம் தன்னம்பிக்கையை வலுப்பெற செய்யும், அறிவுச்சுடரை ஒளிபெறச் செய்யும். இந்த ப்ரம்ம பிரகாசம் உங்களை கவசம் போல பாதுகாக்கின்றது. காயத்ரியான சக்தி அன்னபூரணியயாவாள்.

சவிதா என்னும் சொல்லுக்கு இயக்குபவள் என்பது பொருள். ஆதலால் இயக்குபவன் சூரியன். சூரியனிடம் இயக்கும் சக்தி இருப்பதனால் பிரகாசமாகவும், பிரபஞ்ச ஜோதியாகவும் பிரகாசிக்க, சக்தியாகிய உஷையும் , அக்னியும் சூரியனை இயக்குகின்றார்கள். இந்த நிலையில்தான் வேத காலத்தில் சக்தி வழிபாடு இடம் பெற்றிருந்தது. இந்நிலையில் ஆகமங்கள் உருவம் அமைத்து எழுத்து வடிவம் பெற்று வழிபடும் நிலையைத் தெளிவுபடுத்தின.

உருவங்களில் அர்த்தநாரீஸ்வரர் உருவம் சக்திக்குரிய சமபங்கு கொடுத்த தன்மையை முன்வைக்கின்றது. சிவனுக்குரிய நிலையை, உருவ அமைதியை எடுத்துக்காட்டும் இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின. இவையாவும் சிவபிரானால் அருளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. சக்திக்குரிய ஆகமங்கள் இருபத்தேழு. ஆகமங்கள் தோற்றம் பெற்று சக்தியால் அருளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. சிவனுக்குரிய சக்திகள் ஒன்பது. நவசக்திகளான அவை: சர்வபூதமனி, மனோன்மனி, பலப்ரதமனி, பலவிகரனி, கலவிகரனி, காளி, ரௌத்ரி, கேட்டை, வாமை எனப்படும் நவ சக்திகளாகும். இக்காரணத்தினால்தான் ஒன்பது எண் வரக்கூடிய இருபத்தேழு ஆகமங்கள் தோற்றம் பெற்றன.

சிவனுக்குரிய சமமான நிலையில் சக்தி அமையும்போது "பராசக்தி" எனப் போற்றப்படுகின்றது. சக்தி இல்லையேல் சிவமில்லை, சிவமின்றேல் சக்தியில்லை என்னும் கருத்து வளர்ச்சி பெற்றதாலும் புறச்சமயங்களின் தாக்குதலாலும் சக்திக்கு தனி உரிமை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, புராணங்களின் செல்வாக்கு நிலையால் சாக்தம் என்ற பிரிவு உருவாகியது. சக்தி ஆதாரம் - சிவம்: ஆதேயம். சைவம் தத்துவ நிலையில் சக்திக்கு பெருந்தன்மையுடன் இடம் கொடுத்தது. பிருங்கி முனிவர் சிவத்தை அன்றி சக்தியை வழிபட மறுத்த கொள்கையை வண்டாகத் துளைத்து சிவனை வழிபட்ட கதை பின்னர் அறிவோம். அம்மையே சிவனைப் பூசித்த வரலாறும் சிவனையும் சக்தியையும் ஒருங்கு சேர இணைத்துள்ளன.

சாக்தம் சக்தி வழிபாட்டில் புதிய வழிமுறையில் வகுத்துக் காட்டியுள்ளது. சக்தி வழிபாட்டுக்கு மிக முக்கியமானது கோடுகளாலான யந்திர வழிபாடாகும். யந்திர வழிபாட்டை "ஸ்ரீ சக்ர பூஜை" என்பர். இதனை ஸ்ரீ வித்யா பாவனை என்றும் குறிப்பிடப்படுகின்றது. இது மூன்று வகைப்படும்.

இதில் பூப்ரஸ்தார யந்திரமே இலங்கையில் காணப்படுகின்றது. இப்பூஜை பௌர்ணமி தினத்தில் மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகி பூஜை முடிவில் பக்தர்களுக்கு விபூதி, குங்குமம் ப்ரசாதமாக வழங்கப்படுகின்றது. இப்பூஜை மகத்துவான பொன்னம்பலவாணேசர் கோயிலில் ராஜராஜேசர் முன்னிலையிலும், நயினை நாகபூசணி அம்பாள் முன்னிலையிலும், முன்னேஸ்வரர் ஆலயத்தில் வடிவாம்பிகை முன்னிலையிலும் ஸ்ரீ சக்ர யந்திரத்தில் எழுதப்பட்ட மந்திரங்களை உபாசிக்கும்போது மக்களுக்கு பலன் கொடுப்பதில் பெருமையுள்ள சக்தி வழிபாடாக வலம் வருகின்றது. இவ்வழிபாட்டின் அடிப்படையில்தான் சிவமூர்த்த ஆலயங்களில் விக்கிரகங்களின் கீழ் யந்திரம் வைத்து மருந்து சாத்தப்படுகின்றது.

பராசக்தியான அம்பாள் அறக்கருணை மூலமும், மறக்கருணை மூலமும் அருள் செய்ய வல்லவள். அன்பின் மூலமும், தண்டித்தல் மூலமும் அருள் செய்து சக்தி வழிபாட்டை புராணங்கள் விவரிக்கின்றன. “தேவி பாகவதம்” மந்திரங்களையும் மூர்த்தங்களையும் விரிவுபடுத்தி சிறப்பித்து வெவ்வேறு மூர்த்தங்களாக கௌரி, மனோன்மனி, சாமுண்டீஸ்வரி, துர்க்கை, மகமாரி எனச் சிறப்புப் பெயர்களால் குறிப்பிடுகின்றன.

சக்தி மீது மகாகவி காளிதாசர் பல பாடல்கள் பாடியுள்ளார். மார்க்கண்டேயர் புராணத்தில் வடிவங்களும் பெருமைகளும் கூறப்படுன்றன. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் நூல்களில் காளி,மகாசரஸ்வதி, மகாலட்சுமி, துர்க்கை என்று பெயர்கள் பெற்று அருள் பாலிக்கின்றாள். காரைக்கால் அம்மையாரும் சிவனையும் சக்தியையும் போற்றிப் பாடியுள்ளார்.

சங்கராச்சாரியார் ப்ரபஞ்ச சம்காரம், சௌந்தர்யலகரி ஆகிய நூல்களிலும் சக்தியைப் போற்றிப் பாடியுள்ளார். குமரகுருபரரின் முன் சக்தி தோன்றியபோது சகலகலாவல்லிமாலையையும், அபிராமிப்பட்டர் முன் அன்னையான சக்தி தமது காதில் இருந்த தோட்டைக் கழற்றி ஆகாயத்தில் வீசி இருள் சூழ்ந்த ஆகாயத்தை, பௌர்ணமி நிலவாகப் பிரகாசிக்கச் செய்து, அபிராமிப்பட்டரை மகிழ்வித்தார். அன்னையான சக்தி மீது அபிராமி அந்தாதியைப் பாடி மகிழ்வித்த அபிராமிப்பட்டரையும் நினைந்துருகி யாம் அனைவரும் பாடி மகிழ்ந்திருப்போமாக!

இலங்கையில் சக்தி வழிபாடு-

நயினை நாகபூசணி அம்மை, மாத்தளை முத்துமாரி அம்மை, வற்றாப்பளை கண்ணகி, பன்றித்தலைச்சி கண்ணகி, பத்ரகாளி, சிவகாமி, சீதை அம்மன், பூமாரி, புவனேஸ்வரி, இன்னும் பல பெயர்களைக் கொண்டு சக்தி வழிபாடு செய்கின்றனர்.

இந்தியாவில் சக்தி வழிபாடு:-

சந்திரகுப்தன் ஆட்சிக்காலத்தில் நவராத்திரி விழா ஒரு வீர விழாவாக அனுட்டிக்கப்பட்டும், மொகலாயச் சக்ரவர்த்தி காலத்தில் இவ்விழா தசாரா என அழைக்கப்பட்டும், சிவாஜி மன்னன் காலத்திலும் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. எனவே இறைவழிபாட்டில் சிறப்புப் பெற்று பாலில் உள்ள வெண்மைக்கு ஒப்பிட்டு உலகம் யாவும் சிவசக்தி மயமானது. சக்தி விழா சிறப்பானது.

சக்தி விரதங்களில் ஆடிப்பூரம்:-

ஆடிப்பூரம் மகத்துவமானது. ஆடி மாதத்தில் வருகின்ற பூர நட்சத்திரத்தில் உலக அன்னையாகிய மகா சக்தி பூவுலகில் அவதாரம் செய்தாள். சிவபெருமானுக்கு திருவாதிரையும், திருமாலுக்கு திருவோணமும் போல அம்பிகைக்குரிய சிறப்புத் திருநாள் ஆடிப்பூரமாகும். இதோடு நின்று விடாமல் அன்னை ஆடிப்பூர நன்னாளில் பக்குவமடைந்த நன்னாளாகவும், சைவ மக்கள் வெகு விமரிசையாக கொண்டாடி மகிழ்கின்றனர். அன்னையாகிய மகாசக்தி தோன்றிய ஆடிப்பூரத்தை திருப்புகழ் பாடிய அருணகிநாதர் கந்தர் அந்தாதியில் குறிப்பிட்டு ஐந்து பாடல்கள் பாடி அன்னையை மகிழ்வித்தார்.

கந்தர் அந்தாதியில் என்னையும் மகிழ்வித்த பாடல் ஒன்று கீழே தருகின்றேன் பாடி மகிழ்வோமாக!

**(தொடர்ச்சி 44ஆம் பக்கம்)**

# திருமந்திரத்தின் சிறப்பு

## திரு பொ கனகரத்தினம் (இலங்கை)

திருமந்திரம் திருமூலரால் இயற்றப்பட்டது. வருடத்திற்கு ஒரு பாடலாக மூவாயிரம் வருடங்கள் மூவாயிரம் பாடல்கள் பாடப்பட்டன என்பர். “உயர்ந்த மனிதர்கள்” தங்கள் அனுபவத்தின் பின் தருகின்ற உன்னதச் சொற்களே மந்திரங்கள். “நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி” என்பதைத் தொல்காப்பியம் மந்திரம் என்று கூறுகின்றது.

திருமூலர் தந்த திருமந்திரத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் பரவலாக இருந்தாலும், இதை ஒரு பத்தி நூலாகவும் கொள்ளலாம். “அன்பே சிவம்” என்கிறார் திருமூலர். திருமந்திரம் உன்னதமான தத்துவ நூலாகவும் விளங்குகின்றது. சைவத் தமிழர் போற்றும் திருமுறைகளில் இது பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது. ஆன்மதத்துவம், பிரபஞ்ச தத்துவம் அனைத்தையும் திருமந்திரத்தில் காணலாம். திருமந்திரப் பாடல்கள் இம்மைக்கும் பயன் தரக்கூடியவை. சைவத்திருமுறைகளில் திருமந்திரம் தவிர்ந்த ஏனையவை இசைபாடும் தோத்திரங்களாகும். ஆனால் திருமந்திரமானது தோத்திரமும் சாத்திரமுமான அமைப்பை உடையது.

தமிழில் எழுந்த, காலத்தால் முந்திய நூல் திருமந்திரமாகும். இதற்குக் காலவரையறை அறுதி யிட்டுக் கூறமுடியாதுள்ளது. முப்பொருட் கோட்பாடானது திருமந்திரத்திலேயே முதன்முதல் அமையக் காணலாம்.

சைவத்தின் போற்றப்படும் நூலாகதத் திருக்குறள், அறம், பொருள், இன்பம் பற்றியே எடுத்துரைக்க, காலத்தால் முந்திய திருமந்திரமோ வீடுபேற்றையும் கூறுகின்றது. வீடு பேற்றை மட்டுமன்றி, வேறு பல விடயங்களையும் திருமந்திரம் கூறுகிறது. அதில் கூறப்படாத விடயமே இல்லையென்று கூறலாம்.

மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றுவதற்கும் முன்பே உலகத்தில் தமிழ் உலகில் சாத்திர நூலாக திருமந்திரமே விளங்கியது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கைப் பற்றியும் அது தெளிவாக விளக்கியுள்ளது.

> தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகம்என் றுணர்.

என்னும் ஔவையாரின் பாடல்மூலம் இதை அறியலாம். வாழ்வியலுக்கு இலக்கணமாகத் திருமந்திரம் விளங்குகின்றது. வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய அனைத்து நல்லறன்களையும் திருமந்திரத்தில் காணலாம்.

திருமந்திரத்தில் முதலில் இருப்பது பாயிரமாகும் -

> “ஆயிரம் முகத்தில் அகன்றதாயினும்
> பாயிரம் இல்லது பனுவல்அன்றே”.

பாயிரத்தை முன்னுரையில் பார்த்தால் இந்த நூலில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறியமுடியும்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவை ஒன்பது ஆகமக் கருத்துக்கயையும் சிறப்பாக விளக்குகின்றன.

“மூலன் உரைசெய்து மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே”.

என்று கூறப்பட்டுள்ளது. பாயிரத்தில், கடவுள் வாழ்த்துத் தொடக்கம் திருமூர்த்திகள் வரை 112 மந்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சிவனொடொக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே

கடவுள் வாழ்த்தானது சிவனை அடையும் வழிமுறைகளைக் கூறுகின்றது.
திருமூலர் வரலாறு என்னும் பகுதியிலே

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே

என்று சொன்னபடி, திருவாவடுதுறைக் கோயிலின் வடமேற்குத் திசையிலே திருமூலர் சமாதி உள்ளது.

உண்மையான அன்புடன் ஒரு பச்சிலையாவது இறைவனுக்குச் சூட்டி வழிபட்டால் அதுவே சிவபூசை செய்த பலனைத் தரும். அதனையே திருமந்திரம்,

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

திருமூலர் திருமந்திரத்தில் அறத்தின் சிறப்பு விளக்கப்படுகிறது. “அற்று நின்றார் உண்ணும் அறன்” என்று கூறப்பட்டுள்ளது. பொருளற்று நின்றார்க்கு உணவு கொடுப்பதே அறம் என்கிறார். இறைவன் எல்லார் உள்ளத்திலும் உள்ளான். நமது மனத்திலும் வெளியிலும் நின்று இறைவன் அருள் புரிகின்றான். எங்கும் இருக்கும் இறைவனை மனதிலிருத்தி வழிபடவேண்டும்.

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜூவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.